## ஓசியா - முன்னுரை

### காலமும் இடமும்

பாலஸ்தீன தேசத்தில் கி.மு. 781-711 ஆவது வருஷங்களில் ஓசியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் எழுதப்பட்டது.

### ஆசிரியர்

ஓசியா தீர்க்கதரிசி. (ஓசி 1:1-2). (ஓசி 1:10; ஓசி 2:23=ரோமர் 9:25-26)

### மையக்கருத்து

இந்தப் புஸ்தகம் மனந்திரும்புதலை மையச்செய்தியாகக் கொண்டிருக்கிறது. கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போனவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வருமாறு அழைக்கப் படுகிறார்கள். திரும்பி வரவில்லையென்றால், அதன் விளைவாக அவர்கள் அகற்றப் படுவார்கள். தீர்க்கதரிசியின் வீட்டுப் பிரச்சனைகள் மூலமாகக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம் பேசுகிறார். கர்த்தர் ஓசியாவிடம் ஒரு சோரஸ்திரீயைச் சேர்த்துக் கொள்ளுமாறு கூறுகிறார். (ஓசி 1:2) தேவன் இஸ்ரவேலை அழைக்கும்போது அவர்களுடைய நிலைமை சோரஸ்திரீயைப்போல இருக்கிறது. கர்த்தர் அப்படிப்பட்ட நிலைமையிலுள்ள ஜனங்களைத் தம்மோடு உடன்படிக்கையின் உறவுக்குள் வருமாறு அழைக்கிறார். அப்போது அவர்கள் கர்த்தருடைய ஜனமாக இருப்பார்கள்.

ஓசியாவின் மனைவியின் பெயர் கோமேர். ஓசியாவிற்கும், கோமேருக்கும் பிள்ளைகள் பிறக்கிறார்கள். அதன் பின்பு கோமேர் ஓசியாவைவிட்டு விட்டு, தன்னுடைய பழைய நேசர்களோடு போய்விடுகிறாள். அதன் பின்பும் ஓசியா அவளைத் திரும்பவும் கிரயம் செலுத்தி அழைத்து, தன்னுடைய மனைவியாக்கிக் கொள்கிறார். இனிமேல் அவள் தன்னுடைய பழைய நேசர்களோடு போவதில்லையென்று ஓசியாவோடு உடன்படிக்கை பண்ணிக் கொள்கிறாள்.

இந்த அனுபவம் இஸ்ரவேலுக்கு ஒரு பாடமாகக் கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கையை மீறி அந்நிய தேவர்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் அதை விட்டுவிட்டு கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அப்போது கர்த்தர் அவர்களோடு நித்திய உடன்படிக்கையின் உறவை உறுதிபண்ணுவார்.

ஓசியாவின் புஸ்தகத்தில் காணப்படும் மையக்கருத்துக்களை இரண்டு வார்த்தைகளில் கூறலாம். அவை 1. லோகம்மீ 2. அம்மீ என்பனவாகும். லோகம்மீ என்பதற்கு “என் ஜனமல்ல” என்றும், அம்மீ என்பதற்கு “என் ஜனம்” என்றும் பொருள். (ஓசி 1:9; ஓசி 2:1).

ஓசி 2:14-23 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் திரும்பவும் கூட்டிச் சேர்க்கப்படுவதைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது. இது பல நாட்களுக்குப் பின்பு நடைபெறும். (ஓசி 3:4-5) அப்போது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நித்திய ஜனமாக இருப்பார்கள். ஓசி 6:1-3 ஆகிய வசனங்கள் இஸ்ரவேல் புத்திரர் மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் வருவதைப் பற்றிக் கூறுகிறது. ஓசி 13:14; ஓசி 14:3-9 ஆகிய வசனங்கள் கர்த்தர் அவர்களை நித்தியமாக மீட்பதைப் பற்றிக் கூறுகிறது.

ஓசியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் எழுதப்பட்டதற்கான முக்கியமான நோக்கங்கள் வருமாறு:

1. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போவதை முன்னறிவிப்பது.
2. அவர்கள் பின்வாங்கிப்போகும் நாட்களில் தேசங்கள் மத்தியில் சிதறடிக்கப் படுவார்கள் என்பதை முன்னறிவிப்பது.
3. அவர்களுடைய பின்மாற்றமான நாட்களில் அவர்களுக்கு ராஜாவோ, அதிபதியோ, தேவாலயத்தின் பலிகளோ, ஏபோத்தோ, தேராபீமோ இராது என்பதை முன்னறிவிப்பது. (ஓசி 1:9; ஓசி 3:4-5)
4. இஸ்ரவேல் புத்திரர் இறுதியாகவும் நித்தியமாகவும் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவதை வெளிப்படுத்துவது.
5. தேவனுடைய மன்னிப்பையும், நித்திய ஆசீர்வாதத்தையும் அவர்களுக்கு உறுதி பண்ணுவது. (ஓசி 6:1-3; ஓசி 14:3-9).

### புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 14

வசனங்கள் - 197

## ஓசியா - முன்னுரை

கேள்விகள் - 16

புதிய தீர்க்கதரிசனங்கள் - 23

கட்டளைகள் - 26

வாக்குத்தத்தங்கள் - 10

முன்னறிவிப்புக்கள் - 298

ஓசியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (ஓசி 1:2,4,6,9; ஓசி 2:1; ஓசி 3:1; ஓசி 4:1; ஓசி 5:1; ஓசி 13:9)

**பொருளடக்கம்**

**I.** அடையாள தரிசனங்கள்

1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி (1:1)
2. திருமணம் - யெஸ்ரயேலின் பிறப்பு - பொருள் (1:2-5)
3. லோருகாமாவின் பிறப்பு - பொருள் (1:6-7)
4. லோகம்மீயின் பிறப்பு - பொருள் (1:8-9)
5. வருங்காலத்தில் இஸ்ரவேலர் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் (1:10-11)
6. கோமரின் சிட்சிப்பு - இஸ்ரேல்மீது சிட்சிப்பு - பொருள் (2:1-13)
7. கோமருக்கு நயங்காட்டுதல் - இஸ்ரவேலர் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் - பொருள் (2:14-23)
8. கோமர்மீது ஓசியாவின் தெய்வீக அன்பு - தனக்காக மட்டும் அநேக நாட்களாக இருக்குமாறு ஓசியா வாங்கினான் - பொருள் (3:1-4)
9. பின்பு - மேசியாவின்கீழ் இஸ்ரவேல் மீட்கப்படும் (3:5)

**II.** இஸ்ரவேலுக்கு எதிராக தேவனுடைய வழக்கு

1. இஸ்ரவேலின் எட்டு பாவங்கள் (4:1-2)
2. இஸ்ரவேல்மீது எட்டு அம்ச நியாயத்தீர்ப்பு (4:3-5)
3. இஸ்ரவேலின் எட்டு அம்ச ஆவிக்குரிய நிலையும் நீதிநெறி நிலையும் - எட்டு அம்ச நியாயத்தீர்ப்பு (4:6-11)
4. இஸ்ரவேலின் ஏழு அம்ச விக்கிரகாராதனை - நான்கு அம்ச நியாயத்தீர்ப்பு (4:12-14)
5. யூதாவுக்கு எச்சரிப்பு (4:15-19)
6. இஸ்ரவேலுக்கு அழைப்பு (5:1-2)
7. இஸ்ரவேலின் பாவங்களும் யூதாவின் பாவங்களும் (5:3-15)

**III.** கடைசி நாட்களில் இஸ்ரவேல் மனந்திரும்புவது குறித்த தீர்க்கதரிசனம் (6:1-3)

**IV.** இஸ்ரவேலுக்கு எதிராக தேவனுடைய வழக்கு

1. தெய்வீக பொறுமை (6:4)
2. இஸ்ரவேல்மீது மூன்று அம்ச நியாயத்தீர்ப்பு (6:5)
3. இஸ்ரவேலின் ஆவிக்குரிய பாவங்கள் (6:6-11)
4. பாவங்களும் உள்நாட்டு கலகங்களும் (7:1-7)
5. தேசங்கள்மீது நம்பிக்கை வைப்பது (7:8-11)
6. அசீரியாவிற்குச் சிறைப்பட்டுப்போதல் (7:12-8-3)
7. இஸ்ரவேலின் விக்கிரகாராதனை (8:4-6)
8. இஸ்ரவேலர் சிதறிப்போனார்கள் (8:7-8)
9. வேசித்தனமும் விக்கிரகாராதனையும் (8:9-9:1)
10. எகிப்திற்கும் அசீரியாவிற்கும் சிறைப் பட்டுப்போனார்கள் (9:2-7)
11. இஸ்ரவேலர் தங்களை முழுவதுமாக கெடுத்துக் கொண்டார்கள் (9:8-10)

## ஓசியா - முன்னுரை

12. முழுவதுமாக சிதறிப்போனார்கள் (9:11-17)

13. இஸ்ரவேலின் விக்கிரகாராதனை (10:1)

14. முழுவதுமாக அகற்றப்பட்டார்கள் (10:2-8)

15. கிபியாவின் நாட்களிலிருந்து இஸ்ரவேலின் பாவ சுபாவத்தைப் பற்றி குற்றச்சாட்டு (10:9-11)

16. நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு (10:12)

17. மறுப்பு - நியாயத்தீர்ப்பு தவிர்க்க முடியாதது (10:13-15)

18. தொடர்ச்சியான கலகம் (11:1-7)

19. தேவனுடைய பொறுமை (11:8-11)

20. இஸ்ரவேலின் பாவங்கள் (11:12-12:1)

21. யாக்கோபு மனந்திரும்பிய போது அவன்மீது தேவனுடைய இரக்கம் (12:2-5)

22. இஸ்ரவேலுக்கு இது பொருந்தும் (12:6)

23. இஸ்ரவேலின் குணாதிசயங்கள் (12:7-8)

24. இஸ்ரவேல் இன்னும் மனந்திருந்த வேண்டும் (12:9-10)

25. இஸ்ரவேலின் விக்கிரகாராதனை

26. பிரயாணத்தில் யாக்கோபிற்கும் இஸ்ரவேலருக்கும் தேவனுடைய இரக்கங்கள் (12:11-13)

27. இஸ்ரவேல் இப்பொழுது தேவனுக்கு நன்றி செலுத்தவில்லை (12:14-13:2)

28. இஸ்ரவேல்மீது நியாயத்தீர்ப்பு (13:3-8)

V. இஸ்ரவேலின் இறுதி மீட்பு

1. தற்பொழுதுள்ள நியாயத்தீர்ப்புக்களுக்குக் காரணம் (13:9-13)
2. மீட்பின் வாக்குத்தத்தம் (13:14)
3. முதலாவது முழுமையான அழிவு (13:15-16)
4. தேவனிடம் திரும்பி வருமாறு அழைப்பு (14:1)
5. இஸ்ரவேலின் வருங்கால பாவஅறிக்கை (14:2-3)
6. பதினான்கு அம்ச மீட்பு (14:4-9)

## ஓசியா - தொகுப்புரை

### 1 அதிகாரம்

**I. அடையாள தரிசனங்கள்** - (1:1-3:5)

**1. தலைப்பு, ஆசிரியர், வரலாற்றுப் பின்னணி** - (2இராஜா 15-20; 2நாளா 26-32)

ஓசி 1:1 யூதாதேசத்து ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களிலும், யோவாசின் குமாரனாகிய யெஸ்ரயேலின் ராஜாவாகிய யெரொபெயாம் என்பவனின் நாட்களிலும், பெயேரியின்குமாரனாகிய ஓசியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்.

"பெயேரியின் குமாரனாகிய ஓசியா" - ஓசியா **(Hosea)** என்னும் பெயருக்கு "இரட்சிப்பு" **"salvation"** என்று பொருள். (ஓசி 1:1-2). மறுபெயர் Osee (ரோமர் 9:25) பெயேரி என்பவன் ரூபன் கோத்திரத்திலுள்ள பேரா Beerah என்று யூதமார்க்கத்தின் பாரம்பரிய வரலாறு கூறுகிறது. (1நாளா 5:6). ஆயினும் கிறிஸ்தவ மார்க்கத்தின் பாரம்பரிய வரலாற்றுப் பிரகாரம் இவன் இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

ஓசியா எப்பிராயீம் தேசத்தின் பத்துக் கோத்திரத்தாருக்குத் தீர்க்கதரிசன ஊழியம் செய்து வந்தார். அதே சமயத்தில் யூதா தேசத்தாரையும் கர்த்தருடைய வார்த்தைகளினால் எச்சரித்தார். உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகிய யூதா தேசத்து ராஜாக்களின் காலத்திலும், இஸ்ரவேல் ராஜாவாகிய யெரொபெயாமின் காலத்திலும், ஓசியா தீர்க்கதரிசன ஊழியம் செய்து வந்தார். ஓசியாவின் ஊழியக்காலம் சுமார் 72 வருஷங்களாகும். (ஓசி 1:1).

ஓசியாவின் புஸ்தகத்தில் எப்பிராயீமின் பத்துக் கோத்திரத்தார் உடனடியாக அழியப் போவதும், சமாரியாவின் வீழ்ச்சியும் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓசி 13:16) இது எசேக்கியாவின் ஆறாம் வருஷத்து ராஜ்யபாரத்தின்போது நிறைவேறிற்று. புதிய ஏற்பாட்டில் ஓசியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் பல வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது. (மத் 2:15; மத் 9:13; மத் 12:7; ரோமர் 9:25-26; 1கொரி 15:55; 1பேதுரு 2:5,10).

"கர்த்தருடைய வசனம்" - இந்தப் புஸ்தகத்தில் மூன்று இடங்களில் இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஓசி 1:1,2; ஓசி 4:1).

**2. திருமணம் - யெஸ்ரயேலின் பிறப்பு - பொருள்**

ஓசி 1:2 கர்த்தர் ஓசியாவைக்கொண்டு உரைக்கத்தொடங்கினபோது, கர்த்தர் ஓசியாவை நோக்கி: நீ போய், ஒரு சோர ஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள்; தேசம் கர்த்தரை விட்டு விலகிச் சோரம்போயிற்று என்றார்.

ஓசி 1:3 அவன் போய், திப்லாயிமின் குமாரத்தியாகிய கோமேரைச் சேர்த்துக் கொண்டான்; அவள் கர்ப்பந்தரித்து, அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

ஓசி 1:4 அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: இவனுக்கு யெஸ்ரயேல் என்னும் பேரிடு; ஏனெனில் இன்னும் கொஞ்ச காலத்திலே நான் ஏகூவின் வம்சத்தாரிடத்திலே யெஸ்ரயேலின் இரத்தப்பழியை விசாரித்து, இஸ்ரவேல் வம்சத்தாரின் ராஜ்யபாரத்தை ஒழியப்பண்ணுவேன்.

ஓசி 1:5 அந்நாளில் யெஸ்ரயேலின் பள்ளத்தாக்கிலே இஸ்ரவேலின் வில்லை முறிப்பேன் என்றார்.

**ஓசியாவில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்**

1. நீ போய், ஒரு சோர ஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள் (ஓசி 1:2).
2. இவனுக்கு யெஸ்ரயேல் என்னும் பேரிடு (ஓசி 1:4).
3. இவளுக்கு லோருகாமா என்னும் பேரிடு (ஓசி 1:6).
4. இவனுக்கு லோகம்மீ என்னும் பேரிடு (ஓசி 1:9).
5. உங்கள் சகோதரரைப்பார்த்து அம்மீ என்றும், உங்கள் சகோதரிகளைப்பார்த்து ருகாமா என்றும் சொல்லுங்கள். (ஓசி 2:1).

## ஓசியா - தொகுப்புரை

### 1 அதிகாரம்

6. உங்கள் தாயோடே வழக்காடுங்கள் (ஓசி 2:2).

7. அவள் தன் வேசித்தனங்களைத் தன் முகத்தினின்றும், தன் விபசாரங்களைத் தன் ஸ்தனங்களின் நடுவினின்றும் விலக்கிப் போடக்கடவள்.

8. நீ இன்னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும்,விபசாரியுமானஒரு ஸ்திரீயை நேசித்துக்கொள் (ஓசி 3:1).

9. கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள் (ஓசி 4:1).

10. யூதாவாகிலும் அந்தப் பாவத்துக் குள்ளாகாதிருப்பதாக (ஓசி 4:15).

11. கில்காலுக்கு வராமல் இருப்பீர்களாக.

12. பெத்தாவேனுக்குப் போகாமல் இருப்பீர்களாக.

13. கர்த்தருடைய ஜீவனாணை என்று ஆணையிடாமல் இருப்பீர்களாக.

14. அவனைப் போகவிடு (ஓசி 4:17).

15. ஆசாரியர்களே, இதைக் கேளுங்கள்; (ஓசி 5:1).

16. இஸ்ரவேல் வம்சத்தாரே, கவனியுங்கள்

17. ராஜாவின் வீட்டாரே, செவிகொடுங்கள்.

18. கிபியாவிலே எக்காளத்தை ஊதுங்கள். (ஓசி 5:8).

19. ராமாவிலே பூரிகையை ஊதுங்கள்.

20. பெத்தாவேனிலே கதறுங்கள்.

21. கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள் (ஓசி 6:1).

22. உன் வாயிலே எக்காளத்தை வை (ஓசி 8:1).

23. இஸ்ரவேலே, மகிழ்ச்சியாயிராதே (ஓசி 9:1).

24. நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள் (ஓசி 10:12)

25. இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; (ஓசி 14:1).

26. வார்த்தைகளைக் கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்(ஓசி 14:2).

ஓசியா தீர்க்கதரிசியின் மனைவி வடக்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவள். அவள் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருக்கிறாள். வடக்கு தேசத்தார் கர்த்தரை விட்டுவிட்டு விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவள் தன் கணவனுக்கு உண்மையற்றவளாக வேசித்தனமாக ஜீவிக்கிறாள். கர்த்தரிடத்திலும் விசுவாசம் இல்லாமல் உண்மையற்றவளாக ஜீவிக்கிறாள். (ஓசி 2:1-13). இவள் ஒரு சோர ஸ்திரீ. கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போனவள். விக்கிரகாராதனையில் பயன்படுத்தப்படும் வேசித்தனத்திலும் இவள் ஈடுபட்டிருக்கிறாள்.

**ஓசியா தீர்க்கதரிசி செய்த காரியங்கள்**

1. மோசேயைப்போல விவாதம் பண்ணாமல் (யாத் 4:18) கர்த்தர் சொன்னபடி புறப்பட்டுப் போனார்.
2. அவர் கோமேரைத் தன் மனைவியாகச் சேர்த்துக் கொண்டார். (ஓசி 1:3).
3. ஓசியா தகப்பனானான். கோமேர் ஓசியாவிற்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

"கோமேர்" (Gomer) - இந்தப் பெயருக்கு "நிறைவு" "completion" என்று பொருள். இவள் விக்கிரகாராதனையில் ஒரு குறைவுமில்லாமல் அனைத்தையும் நிறைவாகச் செய்கிறாள்.

**தீர்க்கதரிசன எண் - 1**

" அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: இவனுக்கு யெஸ்ரயேல் என்னும் பேரிடு" (ஓசி 1:4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

## ஓசியா - தொகுப்புரை

### 1 அதிகாரம்

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. இன்னும் கொஞ்ச காலத்திலே நான் யெஸ்ரயேலின் இரத்தப்பழியை விசாரிப்பேன். (ஓசி 1:4; 2இராஜா 9:16, 25,33; 2இராஜா 10:11,14-30).
2. இஸ்ரவேல் வம்சத்தாரின் ராஜ்யபாரத்தை ஒழியப்பண்ணுவேன். (ஓசி 1:4; 2இராஜா 17).
3. அந்நாளில் யெஸ்ரயேலின் பள்ளத்தாக்கிலே இஸ்ரவேலின் வில்லை முறிப்பேன் (ஓசி 1:5; 2இராஜா 18:11).

"யெஸ்ரயேல்" **(Jezreel)** - இந்தப் பெயருக்கு "தேவன் சிதறடிப்பார் அல்லது விதைப்பார்" **"God will scatter or sow"** என்று பொருள். இவன் ஓசியாவின் முதலாவது குமாரன். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சிதறடித்து, எல்லாத் தேசங்களிலும் அவர்களை விதைப்பார் என்று இந்தப் பெயருக்குப் பொருள்கூறலாம். கர்த்தருடைய நோக்கம் நிறைவேறின பின்பு, பல தேசங்களில் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேல் புத்திரர்களை அவர் மறுபடியும் அவர்களுடைய சொந்த தேசத்திற்குத் திரும்பவும் அழைத்து வந்து, அங்கு அவர்களை விதைப்பார். (ஓசி 2:22-23).

"யெகூ" **(Jehu)** - ஆகாபின் வீட்டாரின்மீது யெகூ தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றினான். ஆனால் அதன் பின்பு, ஆகாப் என்ன பாவங்களைச் செய்தானோ அதே பாவங்களை யெகூவும் செய்தான். (2இராஜா 10:31-36). ஆகாபின் வீட்டார் முழுவதுமாக அழிக்கப்பட்டார்கள். இந்த அழிவு "யெஸ்ரயேலின் நாள்" **"the day of Jezreel"** என்று அழைக்கப்படுகிறது. (ஓசி 1:11) கர்த்தருடைய நாளிலும், அர்மெகதோனிலும், உண்டாகும் அழிவை இந்த அழிவு விவரித்துக் காண்பிக்கிறது.

**3. லோருகாமாவின் பிறப்பு - பொருள்**

ஓசி 1:6 அவள் திரும்பக் கர்ப்பந்தரித்து, ஒரு குமாரத்தியைப் பெற்றாள்; அப்பொழுது அவர் அவனை நோக்கி: இவளுக்கு லோருகாமா என்னும் பேரிடு; ஏனெனில் நான் இனி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கஞ் செய்வதில்லை, நான் அவர்களை முழுவதும் அகற்றி விடுவேன்.

ஓசி 1:7 யூதாவின் வம்சத்தாருக்கோ நான் இரக்கஞ்செய்வேன்; வில்லினாலும், பட்டயத்தினாலும், யுத்தத்தினாலும், குதிரைகளினாலும், குதிரைவீரரினாலும் நான் அவர்களை இரட்சியாமல், அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே அவர்களை இரட்சிப்பேன் என்றார்.

**தீர்க்கதரிசன எண் - 2**

"அவள் திரும்பக் கர்ப்பந்தரித்து, ஒரு குமாரத்தியைப் பெற்றாள்.............." (ஓசி 1:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. நான் இனி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கஞ்செய்வதில்லை (ஓசி 1:6).
2. நான் அவர்களை முழுவதும் அகற்றி விடுவேன். (ஓசி 1:6; 2இராஜா 17).
3. யூதாவின் வம்சத்தாருக்கோ நான் இரக்கஞ்செய்வேன் (ஓசி 1:7).
4. யூதாவின் வீட்டாரை இரட்சிப்பேன்.
5. மனுஷருடைய முயற்சியினால் அவர்களை இரட்சிக்காமல், அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே அவர்களை இரட்சிப்பேன்.

"லோருகாமா" **(Loruhamah)** - இந்தப் பெயருக்கு "நான் இனி இரக்கஞ்செய்வதில்லை" **"I will have mercy no more, or I will not have compassion"** என்று பொருள். (ஓசி 1:6; ரோமர் 9:25; 1பேதுரு 2:10).

# ஓசியா - தொகுப்புரை

## 1 அதிகாரம்

"நான் இனி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கஞ் செய்வதில்லை, நான் அவர்களை முழுவதும் அகற்றிவிடுவேன்" - இந்த வாக்கியம் அப்படியே நிறைவேறிற்று. எப்பிராயீம் தேசத்தின் பத்துக் கோத்திரத்தார் மறுபடியும் மீட்கப் படவில்லை. இனிமேல் எப்போதும் மீட்கப்படவும் மாட்டார்கள். கர்த்தர் அவர்களை முழுவதுமாக அகற்றிப்போட்டார். யூதா தேசத்தோடு சேர்ந்துகொண்ட எப்பிராயீம் தேசத்தார் மட்டுமே கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்வார்கள். தாவீதின் ராஜ்யம் அவர்களோடு மீட்கப்படும். அவர்கள் மறுபடியும் ஒரு ராஜ்யமாக ஸ்தாபிக்கப்படுவார்கள். மற்றவர்கள் அழிக்கப்படுவார்கள். கர்த்தர் யூதா கோத்திரத்தார்மீது இரக்கம் காண்பித்தார். அவர்கள் மீட்கப்பட்டார்கள். (ஓசி 1:7).

### 4. லோகம்மீயின் பிறப்பு - பொருள்

ஓசி 1:8 அவள் லோருகாமாவை முலைமறக்கப்பண்ணின பிற்பாடு, கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள்.

ஓசி 1:9 அப்பொழுது அவர்: இவனுக்கு லோகம்மீ என்னும் பேரிடு; ஏனெனில் நீங்கள் என் ஜனமல்ல, நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை.

### தீர்க்கதரிசன எண் - 3

"அப்பொழுது அவர்: இவனுக்கு லோகம்மீ என்னும் பேரிடு..............." (ஓசி 1:9-11) ஓசி 1:9 ஆவது வசனம் நிறைவேறிற்று. ஓசி 1:10-11 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

### நிறைவேறிய முன்னறிவிப்பு

1. நீங்கள் என் ஜனமல்ல, நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை. (ஓசி 1:9).

### நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப் போலிருக்கும் (ஓசி 1:10).
2. நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.
3. அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்படுவார்கள். (ஓசி 1:11).
4. தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்துவார்கள்.
5. தேசத்திலிருந்து புறப்பட்டுவருவார்கள்.

"லோகம்மீ" (Loammi) - இந்தப் பெயருக்கு "என் ஜனமல்ல" **"not My people"** என்று பொருள். கர்த்தர் அவர்களை ஒரு ஜனமாக இராதபடி அகற்றிப்போடுவார். இக்காலத்தில் கர்த்தர் அவர்களுடைய தேவன் என்று அழைக்கப்படுவதையும் அங்கிகரிக்கமாட்டார்.

### 5. வருங்காலத்தில் இஸ்ரவேலர் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்

ஓசி 1:10 என்றாலும் இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப் போலிருக்கும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.

ஓசி 1:11 அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்பட்டு, தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி, தேசத்திலிருந்து புறப்பட்டு வருவார்கள்; யெஸ்ரயேலின் நாள் பெரிதாயிருக்கும்.

# ஓசியா - தொகுப்புரை

## 1 அதிகாரம்

"இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப் போலிருக்கும்" - இஸ்ரவேல் புத்திரர் அகற்றப்பட்டாலும், அவர்கள் கிறிஸ்துவில் பெருகுவார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இரட்சிக்கப்படும்போது அவர்களுடைய எண்ணிக்கை கடற்கரை மணலைப்போல திரளாயிருக்கும். (சக 12:1-13:1; ரோமர் 11:25-29) அவர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (ரோமர் 1:11; ஏசா 11:10; எசே 37) அவர்கள் மறுபடியும் தேவனுடைய ஜனம் என்று அழைக்கப் படுவார்கள். இது வருங்காலத்தில் நிறைவேறப்போகும் சம்பவம். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இந்த முன்னறிவிப்பு நிறைவேறும். (மத் 24:31).

"அப்பொழுது" - யூதா புத்திரரும், இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருடைய பிள்ளைகளாக ஆகும் காலத்தில் கர்த்தர் அவர்களைத் திரும்பவும் ஏகமாய்க் கூட்டிச் சேர்ப்பார். (ஓசி 1:10-11).

"ஏகமாய்க் கூட்டப்பட்டு" - இஸ்ரவேலின் இரண்டு ராஜ்யங்களும் கூட்டப்படும். இரண்டு தேசத்தாருமே சிதறிப்போய்விட்டார்கள். ஓசியா தீர்க்கதரிசனம் கூறியகாலத்தில் இவ்விரண்டு தேசங்களும் சிதறிப்போவதில்லை. தோல்வி யுறவும் இல்லை. இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 72 அல்லது 90 வருஷங்களுக்குப் பின்பு, எப்பிராயீம் தேசத்தின் பத்துக் கோத்திரத்தாரும் சிதறிப்போனார்கள். (2இராஜா 17) 133 வருஷங்களுக்குப் பின்பு யூதா கோத்திரத்தார் சிதறிப்போனார்கள். (2இராஜா 23-25) யூதா தேசத்தார் பாபிலோனிய சிறையிருப்பில் எழுபது வருஷங்கள் இருந்த பின்பு, இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். யூதா புத்திரரோடு தங்கள் தேசத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்று விரும்பிய பத்துக் கோத்திரத்தாரும் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது இவர்கள்இந்தப் பூமியில் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தார்கள்பின்பு கியி. 70 ஆம் வருஷத்தில் இவர்கள் மறுபடியும் புறஜாதியார் மத்தியில் சிதறடிக்கப்பட்டார்கள். (லூக்கா 21:20-24). இப்போது யூதா புத்திரரும், இஸ்ரவேல் புத்திரரும் ஒரளவு கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து கூட்டிச் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். தமது இரண்டாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து பூமியின் எல்லாப் பாகங்களிலும் சிதறியிருக்கும் இஸ்ரவேல் புத்திரரையும், யூதா புத்திரரையும் முழுமையாகக் கூட்டிச் சேர்ப்பார். ( ஏசா 11:10-12, எசே 37; மத் 24:31).

"ஒரே அதிபதி" - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் மறுபடியும் ஒரே ராஜ்யமாக ஒன்றுசேருவார்கள். அவர்களை ஒரே ராஜா ஆளுகை செய்வார். (எசே 37).

## 2 அதிகாரம்

### 6. கோமரின் சிட்சிப்பு - இஸ்ரேல்மீது சிட்சிப்பு - பொருள்

ஓசி 2:1 உங்கள் சகோதரரைப்பார்த்து அம்மீ என்றும், உங்கள் சகோதரிகளைப் பார்த்து ருகாமா என்றும் சொல்லுங்கள்.

ஓசி 2:2 உங்கள் தாயோடே வழக்காடுங்கள்; அவள் எனக்கு மனைவியுமல்ல, நான் அவளுக்குப் புருஷனுமல்ல; அவள் தன் வேசித்தனங்களைத் தன் முகத்தினின்றும், தன் விபசாரங்களைத் தன் ஸ்தனங்களின் நடுவினின்றும் விலக்கிப்போடக்கடவள்.

ஓசி 2:3 இல்லாவிட்டால் நான் அவளை நிர்வாணமாக உரிந்து, அவள் பிறந்தநாளில் இருந்தவண்ணமாக அவளை நிறுத்தி, அவளை அந்தரவெளியைப்போலாக்கி, அவளை வறண்டபூமியைப்போல் விட்டு, அவளைத் தாகத்தால் சாகப்பண்ணுவேன்.

ஓசி 2:4 அவளுடைய பிள்ளைகள் சோரப் பிள்ளைகளாகையால் அவர்களுக்கு இரங்காதிருப்பேன்.

ஓசி 2:5 அவர்களுடைய தாய் சோரம் போனாள், அவர்களைக் கர்ப்பந் தரித்தவள் இலச்சையான காரியங்களைச் செய்தாள்; அப்பத்தையும், தண்ணீரையும், ஆட்டுமயிரையும், பஞ்சையும், எண்ணெயையும், பானங்களையும் கொடுத்துவருகிற என் நேசர்களைப் பின்பற்றிப்போவேன் என்றாள்.

ஓசி 2:6 ஆகையால், இதோ, நான் உன் வழியை முள்ளுகளினால் அடைப்பேன்; அவள் தன் பாதைகளைக் கண்டுபிடிக்கக் கூடாதபடிக்கு மதிலை எழுப்புவேன்.

ஓசி 2:7 அவள் தன் நேசர்களைப் பின் தொடர்ந்தும் அவர்களைச் சேருவதில்லை, அவர்களைத் தேடியும் கண்டு பிடிப்பதில்லை; அப்பொழுது அவள்: நான் என் முந்தின புருஷனிடத்துக்குத் திரும்பிப் போவேன்; இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் அப்பொழுது எனக்கு நன்மையாயிருந்தது என்பாள்.

ஓசி 2:8 தனக்கு நான் தானியத்தையும் திராட்சரசத்தையும் எண்ணெயையும் கொடுத்தவரென்றும், தனக்கு நான் வெள்ளியையும் பொன்னையும் பெருகப் பண்ணினவரென்றும் அவள் அறியாமற் போனாள்; அவைகளை அவர்கள் பாகாலுடையதாக்கினார்கள்.

ஓசி 2:9 ஆதலால் நான் என் தானியத்தை அதின் காலத்திலும், என் திராட்சரசத்தை அதின் காலத்திலும் திரும்ப எடுத்துக் கொண்டு, அவளுடைய நிர்வாணத்தை மூடுகிறதற்கு நான் கொடுத்திருந்த ஆட்டுமயிரையும் சணலையும் திரும்பப் பிடுங்கிக்கொள்ளுவேன்.

ஓசி 2:10 இப்போதும் அவளுடைய நேசர்களின் கண்களுக்கு முன்பாக அவளுடைய அவலட்சணத்தை வெளிப் படுத்துவேன்; ஒருவரும் அவளை என் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பதில்லை.

ஓசி 2:11 அவளுடைய எல்லா மகிழ்ச்சியையும், அவளுடைய பண்டிகைகளையும், அவளுடைய மாதப்பிறப்புகளையும் அவளுடைய ஓய்வுநாட்களையும், சபைகூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளையும் ஒழியப்பண்ணுவேன்.

ஓசி 2:12 என் நேசர்கள் எனக்குக் கொடுத்த பணையம் என்று அவள் சொன்ன அவளுடைய திராட்சச் செடிகளையும், அவளுடைய அத்தி மரங்களையும் நான் பாழாக்கி, அவைகளைக் காடாய்ப்போகப் பண்ணுவேன்; காட்டுமிருகங்கள் அவைகளைத் தின்னும்.

# ஓசியா - தொகுப்புரை

## 2 அதிகாரம்

ஓசி 2:13 அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப் பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, தன் நேசரைப் பின் தொடர்ந்து, என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"சகோதரிகள்" - ஒரு மகளும், இரண்டு குமாரர்களும் பிறந்திருக்கிறார்கள். (ஓசி 2:3-4, 6,8-9).

**தீர்க்கதரிசன எண் - 4**

"உங்கள் சகோதரரைப்பார்த்து அம்மீ என்றும்.........." (ஓசி 2:1-23) ஓசி 2:1-13 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஓசி 2:14-23 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. அவளுடைய பிள்ளைகளுக்கு இரங்காதிருப்பேன். (ஓசி 2:4).
2. உன் வழியை முள்ளுகளினால் அடைப்பேன். அவள் தன் பாதைகளைக் கண்டுபிடிக்கக் கூடாதபடிக்கு மதிலை எழுப்புவேன். (ஓசி 2:6).
3. அவள் தன் நேசர்களைப் பின்தொடர்ந்தும் அவர்களைச் சேருவதில்லை (ஓசி 2:7).
4. அவர்களைத் தேடியும் கண்டுபிடிப்பதில்லை
5. அப்பொழுது அவள்: நான் என் முந்தின புருஷனிடத்துக்குத் திரும்பிப்போவேன்; இப்பொழுது இருக்கிறதைப்பார்க்கிலும் அப்பொழுது எனக்கு நன்மையாயிருந்தது என்பாள்.
6. நான் என் தானியத்தை அதின் காலத்தில் திரும்ப எடுத்துக்கொள்வேன். (ஓசி 2:9).
7. என் திராட்சரசத்தை அதின் காலத்தில் திரும்ப எடுத்துக்கொள்வேன்.
8. அவளுடைய நிர்வாணத்தை மூடுகிறதற்கு நான் கொடுத்திருந்த ஆட்டுமயிரையும் சணலையும் திரும்பப் பிடுங்கிக் கொள்ளுவேன்.
9. அவளுடைய நேசர்களின் கண்களுக்கு முன்பாக அவளுடைய அவலட்சணத்தை வெளிப்படுத்துவேன் (ஓசி 2:10).
10. ஒருவரும் அவளை என் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பதில்லை.
11. அவளுடைய எல்லா மகிழ்ச்சியையும் ஒழியப்பண்ணுவேன். (ஓசி 2:11).
12. அவளுடைய பண்டிகைகளை ஒழியப் பண்ணுவேன்.
13. அவளுடைய மாதப்பிறப்புகளை ஒழியப் பண்ணுவேன்.
14. அவளுடைய ஓய்வுநாட்களை ஒழியப் பண்ணுவேன்.
15. சபைகூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளை ஒழியப்பண்ணுவேன்.16. அவளுடைய திராட்சச்செடிகளையும், அவளுடைய அத்திமரங்களையும் நான் பாழாக்கி, அவைகளைக் காடாய்ப்போகப் பண்ணுவேன்; (ஓசி 2:12).
17. காட்டுமிருகங்கள் அவைகளைத் தின்னும்.
18. அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் (ஓசி2:13).

**நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்**

1. நான் அவளுக்கு நயங்காட்டுவேன். (ஓசி 2:14).
2. அவளை வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டுபோவேன்.

## ஓசியா - தொகுப்புரை

### 2 அதிகாரம்

3. அவளோடே பட்சமாய்ப் பேசுவேன்.

4. அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களைக் கொடுப்பேன். (ஓசி 2:15)

5. நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்.

6. அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்துதேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்.

7. அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் (ஓசி 2:16).

8. பாகால்களுடைய நாமங்களை அவள் வாயிலிருந்து அற்றுப்போகப் பண்ணுவேன் (ஓசி 2:17).

9. இனி அவைகளின் பேரைச் சொல்லி, அவைகளை நினைக்கிற நினைப்பும் இல்லாமற்போகும்.

10. அக்காலத்தில் நான் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும், ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும், ஒரு உடன்படிக்கை பண்ணுவேன். (ஓசி 2:18).

11. வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்துப்போடுவேன்.

12. அவர்களைச் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப்பண்ணுவேன்.

13. நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; (ஓசி 2:19).

14. நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்.

15. உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன் (ஓசி 2:20).

16. நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்.

17. அக்காலத்தில் நான் வானங்களுக்கு மறுமொழிகொடுப்பேன் (ஓசி 2:21)

18. அவைகள் பூமிக்கு மறுமொழிகொடுக்கும்.

19. பூமி தானியத்துக்கும் திராட்சரசத்துக்கும் எண்ணெய்க்கும் மறுமொழிகொடுக்கும் (ஓசி 2:21-22).

20. இவைகள் யெஸ்ரயேலுக்கும் மறுமொழி கொடுக்கும். (ஓசி 2:22).

21. நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைப்பேன். (ஓசி 2:23)

22. இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்.

23. என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்.

24. அவர்கள் என் தேவனே என்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரைப் பற்றி மேலே கூறப்பட்டிருக்கும் முன்னறிவிப்புகள் அவர்கள் மறுபடியும் மீட்டுக்கொள்ளப்படுவார்கள் என்பதை உறுதிபண்ணுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் கிறிஸ்துவோடு மணவாட்டியின் உடன்படிக்கைக்குள் வருவார்கள். இந்தத் தீர்க்கதரிசனத்தை வெளி 12 அதிகாரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தன் மெய்யான சத்தியம் வெளிப்படும். இஸ்ரவேல் தேசம் வனாந்தரத்திற்குள் போவதைப் பற்றி வெளி 12 ஆவது அதிகாரத்தில் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறிச் சென்றபோது, கர்த்தர் மோசேயின் மூலமாகவும், ஆரோனின் மூலமாகவும் பரிந்து பேசியதுபோல இவர்களோடும் பரிந்துபேசுவார்.

“தாய்” - கோமேர். (ஓசி 1:3)

## ஓசியா - தொகுப்புரை

### 2 அதிகாரம்

"அவள் எனக்கு மனைவியுமல்ல, நான் அவளுக்குப் புருஷனுமல்ல" - கோமேர் ஓசியாவை விட்டு போய்விட்டாள். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைவிட்டு விட்டுப் போய்விட்டார்கள். கோமேர் தன் வேசித்தனங்களையும், விபச்சாரங்களையும் நாடிப்போனாள். இதனால் கோமேருக்கும், ஓசியாவிற்கும் இடையிலுள்ள திருமண உறவு சிறிதுகாலம் முறிந்துபோயிற்று. இதுபோல இஸ்ரவேல் புத்திரருக்கும், கர்த்தருக்கும் இடையிலுள்ள உடன்படிக்கையின் உறவும் சிறிதுகாலம் முறிந்துபோயிற்று.

"அவர்களுடைய தாய் சோரம் போனாள்" - கோமேர் தன்னுடைய பழைய நேசர்களைத் தேடிப் போய்விட்டாள். மறுபடியும் சோரம் போனாள். இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போய் விக்கிரகங்களை ஆராதித்துக் கொண்டிருக்கிறார்கள். (ஓசி 2:5-23).

**சோரமார்க்கத்தில் கோமேருக்கு இருந்தவை**

1. நேசர்கள்
2. அப்பம்
3. தண்ணீர்
4. ஆட்டு மயிர்
5. பஞ்சு
6. எண்ணெய்
7. பானங்கள்

"நான் உன் வழியை முள்ளுகளினால் அடைப்பேன்" - கோமேர் தன்னுடைய சோரம் போன வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கமாட்டாள். தன்னுடைய புருஷனான ஓசியாவை மறுபடியும் நினைப்பாள். அவனோடு திரும்பி வந்து வாழவேண்டுமென்று விரும்புவாள். (ஓசி 2:6-8).

"அவள் அறியாமற் போனாள்" - கோமேரின் பழைய நேசர்கள் கொடுப்பதை ஓசியாவும் ஏற்கெனவே கொடுத்திருக்கிறார். அதைவிட அதிகமாகவே கொடுத்திருக்கிறார். ஆனால் அவளோ அதை நினைத்துப் பார்ககவில்லை. கோமேரின் வேசித்தனத்தின் நிமித்தம் அவள் தண்டிக்கப்படுவாள். அவளுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்கப்படும். (ஓசி 2:9-10).

"திரும்ப எடுத்துக்கொண்டு..........திரும்பப் பிடுங்கிக்கொள்ளுவேன்" - கோமேரின்மீது வரும் நியாயத்தீர்ப்பு இஸ்ரவேலுக்கும் வரும் என்று முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓசி 2:11-13). இஸ்ரவேல் மறுபடியும் மீட்டுக் கொள்ளப்படுவது ஓசி 2:14-23 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

"அவளுடைய ஓய்வுநாட்களையும், சபைகூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளையும் ஒழியப்பண்ணுவேன்" - கர்த்தர் புதிய உடன்படிக்கையை உண்டாக்கும்போது பழையவையெல்லாம் ஒழிந்துபோகும். ஓய்வுநாள் பிரமாணம் ஏற்கெனவே ஒழிக்கப்பட்டு விட்டது. ஓய்வுநாளைப் பொறுத்தளவில் ஒவ்வொரு மனுஷனும் தனக்குப் பிரியமானதைச் செய்யலாம் என்று புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது. (ரோமர் 14:5-6) ஓய்வுநாள் விஷயத்தில் யாரும், யாரையும் குற்றப்படுத்தக்கூடாது. (கொலோ 2:14-17) ஏனெனில் கிறிஸ்தவ மார்க்கம் நாட்களையோ, வாரங்களையோ, வருஷங்களையோ, பண்டிகைகளையோ மேன்மைப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப் பட்டமாக்கவில்லை. (கலா 4:9-10).

"அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி" - இஸ்ரவேல் புத்திரர் பாகாலை ஆராதிக்கிறார்கள். இதற்காகக் கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார். (ஓசி 2:11-13).

"தன் நெற்றிப்பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச் சிங்காரித்துக் கொண்டு" - (எசே 16:11-14; எசே 23:40-42)

"தன் நேசர்" - இந்த வாக்கியம் இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றிலுமுள்ள புறஜாதி தேசங்களைக் குறிக்கும். இஸ்ரவேல் புத்திரர் அவர்களோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள். தங்களுடைய பாதுகாப்பிற்குக் கர்த்தரை நம்புவதற்குப் பதிலாகப் புறஜாதி தேசத்தாரை நம்பினார்கள்.

## 2 அதிகாரம்

### 7. கோமருக்கு நயங்காட்டுதல் - இஸ்ரவேலர் கூட்டிச்சேர்க்கப் படுவார்கள் - பொருள்

ஓசி 2:14 ஆயினும், இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டு போய், அவளோடே பட்சமாய்ப் பேசி,

ஓசி 2:15 அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்துதேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்.

ஓசி 2:16 அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார்.

ஓசி 2:17 பாகால்களுடைய நாமங்களை அவள் வாயிலிருந்து அற்றுப்போகப் பண்ணுவேன்; இனி அவைகளின் பேரைச் சொல்லி, அவைகளை நினைக்கிற நினைப்பும் இல்லாமற்போகும்.

ஓசி 2:18 அக்காலத்தில் நான் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும், ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும், ஒரு உடன்படிக்கைபண்ணி, வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களைச் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப் பண்ணுவேன்.

ஓசி 2:19 நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்.

ஓசி 2:20 உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்.

ஓசி 2:21 அக்காலத்தில் நான் மறுமொழி கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானங்களுக்கு மறுமொழி கொடுப்பேன்; அவைகள் பூமிக்கு மறுமொழிகொடுக்கும்.

ஓசி 2:22 பூமி தானியத்துக்கும் திராட்சரசத்துக்கும் எண்ணெய்க்கும் மறுமொழிகொடுக்கும், இவைகள் யெஸ்ரயேலுக்கும் மறுமொழி கொடுக்கும்.

ஓசி 2:23 நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள் என்றார்.

"நான் அவளுக்கு நயங்காட்டி" - ஓசி 2:13 ஆவது வசனத்தில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஓசி 2:14 ஆவது வசனத்தில் கர்த்தருடைய கிருபை வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரின் மீறுதலின் நிமித்தம் அவர்கள்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். கர்த்தருடைய கிருபையினிமித்தம் இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். (ஓசி 2:14-23)

"அவளை வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டுபோய்" - இந்த வாக்கியம் வெளி 12 ஆவது அதிகாரத்தில் ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போவதைக் குறிப்பிடுகிறது.

"அவளோடே பட்சமாய்ப் பேசி" - வனாந்தரத்தில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காகப் பல காரியங்களைச் செய்வார். அவற்றின் விவரம் வருமாறு: (ஓசி 2:14-23; வெளி 12:6,14)

1. அவளோடே பட்சமாய்ப் பேசுவார். (ஓசி 2:14).

2. அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களைக் கொடுப்பார். (ஓசி 2:15).

## ஓசியா - தொகுப்புரை

### 2 அதிகாரம்

3. நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கைக் கொடுப்பார்.

4. அவளை அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்துதேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாட வைப்பார்.

5. பாகால்களுடைய நாமங்களை அவள் வாயிலிருந்து அற்றுப்போகப் பண்ணுவார். (ஓசி 2:17).

6. இனி அவைகளின் பேரைச் சொல்லி, அவைகளை நினைக்கிற நினைப்பும் அவளுக்கு இல்லாமற்போகப் பண்ணுவார்.

7. அக்காலத்தில் கர்த்தர் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும், ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும், ஒரு உடன்படிக்கை பண்ணுவார். (ஓசி 2:18).

8. வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து போடுவார்.

9. அவர்களைச் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப்பண்ணுவார்.

10. நித்திய விவாகத்துக்கென்று அவளை தமக்கு நியமித்துக்கொள்ளுவார். (ஓசி 2:19).

11. நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் அவளை தமக்கு நியமித்துக் கொள்ளுவார்.

12. உண்மையாய் அவளை தமக்கு நியமித்துக்கொள்ளுவார். (ஓசி 2:20).

13. அவள் கர்த்தரை அறிந்துகொள்ளுமாறு செய்வார்.

14. அவர்களைச் செழிக்கச் செய்வார். (ஓசி 2:21)

15. கர்த்தர் அவளை தமக்கென்று பூமியிலே விதைப்பார். (ஓசி 2:23)

16. இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவார்.

17. தம் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவார்.

18. கர்த்தர் அவர்களுடைய தேவனாக இருப்பார்.

"பாகாலி" **(Baali]** -இந்தப் பெயருக்கு "என் ஆண்டவர்" **"my Lord"** என்று பொருள்.

"ஈஷி" **Ishi** - இந்தப் பெயருக்கு "என் கணவர்" **"my husband"** என்று பொருள்.

"நான் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும்.......ஒரு உடன்படிக்கை பண்ணி" - இஸ்ரவேல் புத்திரருக்கும், பூமியின் சிருஷ்டிகளுக்கும் கர்த்தர் இந்தச் சமாதான உடன்படிக்கையை உண்டுபண்ணுவார். ஆதியிலே மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட ஆளுகை மறுபடியும் கொடுக்கப்படும். (ஆதி 1:26-31).

"வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து" - யுத்தம் இராது. (ஏசா 2:4).

"அவர்களைச் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப்பண்ணுவேன்." - உலகம் முழுவதிலுமுள்ள மனுஷருக்கும், மிருகங்களுக்கும் உலக சமாதானம் உண்டாயிருக்கும்.

"நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்" - ஓசியா இரண்டாம் முறையாக கோமேரை விவாகம் பண்ணுகிறார். தன்னுடைய புருஷனுக்கு உண்மையுள்ளவளாக நடந்து கொள்ள வேண்டும் என்னும் பாடத்தைக் கோமேர் படித்த பின்பு ஓசியா அவளை விவாகம் பண்ணுகிறார். இஸ்ரவேலுக்கும், இதுபோன்ற சம்பவம் நடைபெறும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வரும்போது அவர் அவர்களைச் சேர்த்துக் கொள்வார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு மறுபடியும் நீதியிலும், உண்மையிலும் மணவாட்டியின் உடன்படிக்கையை ஏற்படுத்துவார். (ஓசி 2:19-20).

# ஓசியா - தொகுப்புரை

## 2 அதிகாரம்

"அக்காலத்தில்" - இந்த வாக்கியம் அல்லது "அந்நாளிலே" என்னும் வாக்கியம் ஓசியாவின் புஸ்தகத்தில் நான்கு இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (ஒசி 1:5; ஒசி 2:16,18,21).

"நான் வானங்களுக்கு மறுமொழி கொடுப்பேன்" - இந்த வாக்கியம் செழிப்பையும், வளமையையும் குறிப்பிடுகிறது. (ஒசி 2:21-22).

"நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து" - கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை மீட்டுக்கொண்டு அவர்களுடைய சொந்த தேசத்தில் தமக்கென்று விதைப்பார். (ஒசி 1:10-11). இதனால் ஒசி 2:22 ஆவது வசனத்தில் "யெஸ்ரயேல்" என்னும் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்" - இந்த வாக்கியம் ரோமர் 9:25 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது. இது புறஜாதியாருக்கும், இஸ்ரவேலில் பின்வாங்கிப் போனவர்களுக்கும் கூறப்பட்டிருக்கிறது. (1பேதுரு 2:10).

## 3 அதிகாரம்

**8. கோமர்மீது ஓசியாவின் தெய்வீக அன்பு - தனக்காக மட்டும் அநேக நாட்களாக இருக்குமாறு ஓசியா வாங்கினான் - பொருள்**

ஓசி 3:1 பின்பு கர்த்தர் என்னை நோக்கி: அந்நிய தேவர்களை மதித்து, திராட்ச ரசமுள்ள பாத்திரங்களை விரும்புகிறவர்களான இஸ்ரவேல் புத்திரர்பேரில் கர்த்தர் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக நீ இன்னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும், விபசாரியுமான ஒரு ஸ்திரீயை நேசித்துக் கொள் என்று சொன்னார்.

ஓசி 3:2 அப்பொழுது நான் அவளை எனக்குப் பதினைந்து வெள்ளிக்காசுக்கும், ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்கும் கொண்டு,

ஓசி 3:3 அவளை நோக்கி: நீ வேசித்தனம் பண்ணாமலும், ஒருவனையும் சேராமலும் அநேகநாள் எனக்காகக் காத்திரு; உனக்காக நானும் காத்திருப்பேன் என்றேன்.

ஓசி 3:4 இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலி இல்லாமலும், சிலை இல்லாமலும், ஏபோத் வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும் இருப்பார்கள்.

**தீர்க்கதரிசன எண் - 5**

"பின்பு கர்த்தர் என்னை நோக்கி............" (ஓசி 3:1-5) ஓசி 3:4 ஆவது வசனம் நிறைவேறிற்று. ஓசி 3:5 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமல் இருப்பார்கள். (ஓசி 3:4).
2. இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் அதிபதி இல்லாமல் இருப்பார்கள்.
3. இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் பலி இல்லாமல் இருப்பார்கள்.
4. இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் சிலை இல்லாமல் இருப்பார்கள்.
5. இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ஏபோத் வஸ்திரம் இல்லாமல் இருப்பார்கள்.
6. இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் தேராபீம் இல்லாமல் இருப்பார்கள்.

**நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்**

1. பின்பு (அநேக நாளுக்குப்பின்பு ஓசி 3:4 ஆவது வசனம் நிறைவேறும்போது) இஸ்ரவேல் புத்திரர் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்புவார்கள். (ஓசி 3:5).
2. தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள்.
3. தங்கள் ராஜாவாகிய தாவீதைத் தேடுவார்கள்.
4. கடைசி நாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்.

"நீ இன்னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும், விபசாரியுமான ஒரு ஸ்திரீயை நேசித்துக்கொள்" - கோமேர் ஓசியாவைத் தள்ளி வைத்துவிட்டு தன் பழைய நேசரோடு போய்விட்டாள். அவளோடு மறுபடியும் சேர்ந்துகொள்ளுமாறு கர்த்தர் ஓசியாவிற்குக் கூறுகிறார். இஸ்ரவேல் புத்திரரும் விக்கிரகங்களை நாடி, கர்த்தரை விட்டு விட்டார்கள். கர்த்தர் அவர்களைத் திரும்பச் சேர்த்துக் கொள்கிறார். (ஓசி 3:1). ஓசியா வெள்ளிக்காசையும், கோதுமையையும் கொடுத்து, தன் மனைவியை மீட்டுக் கொள்கிறார். (ஓசி 3:2) இனிமேல் நீ வேசித்தனம் பண்ணாமலும், ஒருவனையும் சேராமலும் அநேகநாள் எனக்காகக் காத்திரு; உனக்காக நானும் காத்திருப்பேன் என்று ஓசியா கோமேரிடம் கூறுகிறார். (ஓசி 3:3). இதுவும் இஸ்ரவேல் புத்திரருக்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. (ஓசி 3:4-5).

## ஓசியா - தொகுப்புரை

### 3 அதிகாரம்

**ஓசியாவினுடைய மனைவியின் கிரயம்**

பதினைந்து வெள்ளிக்காசு என்பது ஒரு அடிமையை மீட்பதற்குச் செலுத்த வேண்டிய கிரயமாகும். அக்காலத்தில் வாற்கோதுமைக்கு அதிக விலை மதிப்பு இருந்தது.

"நீ வேசித்தனம் பண்ணாமலும், ஒருவனையும் சேராமலும் அநேகநாள் எனக்காகக் காத்திரு" - ஒரு சோரம்போன ஸ்திரீயைச்சேர்த்துக் கொள்ளுமாறு கர்த்தர் ஓசியாவிடம் கூறினார். ஓசியா கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து கோமேரைச் சேர்த்துக் கொண்டார். ஆனால் அவளோ தன் பழைய நேசரைத் தேடி ஓசியாவை விட்டுவிட்டுப் போய்விட்டாள். அவளை மறுபடியும் அவளுடைய பழைய நேசரிடமிருந்து ஓசியா கிரயம் செலுத்தி மீட்கிறார். ஓசியா தேவனுடைய தெய்வீக ஞானத்தைக் குறை கூறவில்லை. இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை நாடி, கர்த்தரை விட்டு விட்டுப்போய்விட்டார்கள். கர்த்தர் அவர்களைக் கிரயம் செலுத்தி மீட்டுக் கொள்கிறார். கோமேருக்கு பதினைந்து வெள்ளிக்காசு கிரயம் செலுத்தப்படுகிறது. இனிமேல் அவள் ஓசியாவிற்கு மட்டுமே உரியவள். அவள் ஓசியாவோடு அநேகநாள் உண்மையோடு இருக்க வேண்டும்.(ஓசி 3:3). அநேக நாள் என்பது இஸ்ரவேல் தேசத்தார் தேசங்கள் மத்தியில் ராஜா இல்லாமல் சிதறிப்போய் இருந்த காலத்தையும் குறிக்கும். (ஓசி 3:3-4). அதன் பின்பு அவர்கள் தேவனிடத்தில் திரும்பி வருவார்கள். கோமேர் ஓசியாவை விட்டு போனபின்பு, அவள் மறுபடியும் ஓசியாவிடம் திரும்ப வந்ததுபோல இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரிடத்தில் வருவார்கள். (ஓசி 3:5).

"இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமலும்" - பல வருஷங்களாக இந்த வாக்கியம்நிறைவேறி வருகிறது. கி.மு. 606 ஆவது வருஷத்திலிருந்து இந்நாள் வரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாவோ, அதிபதியோ இல்லை. அவர்கள் பாபிலோன் தேசத்திலிருந்து பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள். தேவாலயத்தில் மறுபடியும் பலிகளைச் செலுத்தினார்கள். கி.பி. 70 ஆம் வருஷத்திற்குப் பின்பு, அவர்களால் தேவாலயத்தில் பலியைச் செலுத்த முடியவில்லை. அவர்களுக்கு இப்போது தேராபீமும் இல்லை.

**9. பின்பு - மேசியாவின்கீழ் இஸ்ரவேல் மீட்கப்படும்** - (அப் 15:13)

> ஓசி 3:5 பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசி நாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்.

"பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி" - தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள். இந்தத் தீர்க்கதரிசனப் பகுதி இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்பி வருவது ஓரளவு நிறைவேறிக் கொண்டிருக்கிறது. கடைசி நாட்களில் அவர்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவதும், தங்கள் ராஜாவாகிய தாவீதைத் தேடுவதும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிறைவேறும். (சக 12:10-13:1; சக 14:1-21; மல் 4:5-6; ரோமர் 11:25-29; வெளி 11:1-2,15; வெளி 20:4-10). தாவீது மேசியாவின்கீழ் சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாக இருப்பார். பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும் தாவீது மேலாக இருப்பார். (எரே 30:9; எசே 34:23-24; எசே 37:24).

## 4 அதிகாரம்

**II. இஸ்ரவேலுக்கு எதிராக தேவனுடைய வழக்கு** - *(4:1-5; ஏசா 1:2)*

**1. இஸ்ரவேலின் எட்டு பாவங்கள்**

ஓசி 4:1 இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; தேசத்துக்குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை; தேவனைப்பற்றிய அறிவும் இல்லை.

ஓசி 4:2 பொய்யாணையிட்டு, பொய் சொல்லி, கொலைசெய்து, திருடி, விபசாரம்பண்ணி, மிஞ்சி மிஞ்சிப் போகிறார்கள்; இரத்தப்பழிகளோடே இரத்தப்பழிகள் சேருகிறது.

**தீர்க்கதரிசன எண் - 6**

" இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்............" (ஓசி 4:1-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. தேசம் புலம்பும் (ஓசி 4:3).
2. அதில் குடியிருக்கிற அனைவரோடுங்கூட மிருக ஜீவன்களும் ஆகாயத்துப் பறவைகளும் தொய்ந்துபோகும்.
3. கடலின் மச்சங்களும் வாரிக்கொள்ளப் படும்.
4. நீ பகலிலே இடறிவிழுவாய் (ஓசி 4:5).
5. இரவிலே உன்னோடேகூடத் தீர்க்கதரிசியும் இடறிவிழுவான்.
6. உன் தாயை நான் சங்காரம்பண்ணுவேன்.
7. நான் உன்னை வெறுத்துவிடுவேன். (ஓசி 4:6).
8. நீ என் ஆசாரியனாயிருக்கமாட்டாய்.
9. நான் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்.
10. அவர்களுடையமகிமையைஇலச்சையாக மாறப்பண்ணுவேன் (ஓசி 4:7).
11. அவர்கள் வழிகளின்படி நான் அவர்களை விசாரிப்பேன். (ஓசி 4:9).
12. அவர்கள் கிரியைகளின்படி அவர்களுக்குப் பலனளிப்பேன்.
13. அவர்கள் தின்றாலும் திருப்தியடையாதிருப்பார்கள்.(ஓசி 4:10)
14. அவர்கள் வேசித்தனம்பண்ணினாலும் பலுகாதிருப்பார்கள்
15. உங்கள் குமாரத்திகள் வேசித்தனம் செய்கிறார்கள். (ஓசி 4:13).
16. உங்கள் மருமக்கள்மார் விபசாரம் செய்கிறார்கள்.
17. நான் அவர்களைத் தண்டிப்பேன். (ஓசி 4:14).
18. உணர்வில்லாத ஜனங்கள் அதினால் சிக்குண்டு விழுவார்கள்.
19. கர்த்தர் அவர்களை விஸ்தாரமான வெளியிலே ஆட்டுக்குட்டியைப்போல் மேய்ந்து அலையப்பண்ணுவார். (ஓசி 4:16).
20. அவர்கள் தங்கள் பலிகளால் வெட்கப்படுவார்கள். (ஓசி 4:19).

"தேசத்துக்குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது" - (ஓசி 3:13-14; ஓசி 12:2; ஏசா 1:18; ஏசா 34:8; எரே 25:31; மீகா 6:2)

**தேவனுடைய வழக்குக்குக் காரணம்**

1. தேசத்திலே உண்மை இல்லை. (ஓசி 4:1).
2. தேசத்திலே இரக்கம் இல்லை.

# ஓசியா - தொகுப்புரை

## 4 அதிகாரம்

3. தேசத்திலே தேவனைப்பற்றிய அறிவு இல்லை.

4. இஸ்ரவேலின் பாவங்கள் (ஓசி 4:2)

### இஸ்ரவேலின் பாவங்கள்

1. வேசித்தனம். (ஓசி 1:2; ஓசி 2:2-4; ஓசி 4:10-18; ஓசி 5:3-4; ஓசி 6:10)
2. விபசாரம் (ஓசி 2:2; ஓசி 3:1; ஓசி 4:2; ஓசி 7:4)
3. உண்மையின்மை (ஓசி 2:3,13; ஓசி 6:7; ஓசி 8:11)
4. வேண்டுமென்றே அறியாமலிருப்பது. (ஓசி 2:8; ஓசி 4:1; ஓசி 5:4; ஓசி 6:6; ஓசி 11:3)
5. விக்கிரகாராதனை (ஓசி 2:8-13; ஓசி 4:12-17; ஓசி 5:11; ஓசி 6:8; ஓசி 8:4-11; ஓசி 9:1; ஓசி 10:1-9; ஓசி 11:2; ஓசி 13:1-2)
6. மாய்மாலம் (ஓசி 2:11; ஓசி 4:8; ஓசி 6:6; ஓசி 8:13-14; ஓசி 9:4)
7. தேவனை மறப்பது. (ஓசி 2:13; ஓசி 8:14; ஓசி 13:6)
8. இலச்சை (ஓசி 2:5; ஓசி 9:1)
9. நன்றியின்மை (ஓசி 2:8; ஓசி 11:3-4)
10. பொய்யாணை (ஓசி 4:2)
11. பொய் (ஓசி 4:2; ஓசி 7:1,3,13; ஓசி 10:13; ஓசி 11:12)
12. இரத்தப்பழி (ஓசி 4:2; ஓசி 6:9)
13. திருட்டு (ஓசி 4:2)
14. தேவனுடைய பிரமாணத்தை மறப்பது (ஓசி 4:6)
15. மீறுதல் (ஓசி 4:6; ஓசி 7:13; ஓசி 8:3; ஓசி 13:16)
16. பின்மாற்றமும், தேவதூஷணமும் (ஓசி 4:7-8,16; ஓசி 5:2; ஓசி 7:10; ஓசி 9:1,15; ஓசி 11:7)
17. இரக்கமின்மை (ஓசி 4:1; ஓசி 6:6)
18. விக்கிரகங்களுக்குப் பலியிட்டதைப் புசிப்பது (ஓசி 4:8)
19. அக்கிரமத்தின் பேரில் பசிதாகமாக இருப்பது (ஓசி 4:8)
20. விக்கிரகங்களிடம் ஆலோசனை கேட்பது (ஓசி 4:12)
21. குறிசொல்லும் கோல்களைப் பயன்படுத்துவது (ஓசி 4:12)
22. கர்த்தருக்கு விரோதமாக துரோகம் (ஓசி 5:7; ஓசி 6:7)
23. பெருமை (ஓசி 5:5; ஓசி 7:10; ஓசி 10:13; ஓசி 13:6)
24. தோஷம் (ஓசி 6:9-10)
25. அநீதி (ஓசி 7:7)
26. ஜெபமின்மை (ஓசி 7:7,10,14)
27. இருதயக்கடினம் (ஓசி 7:6)
28. ஏளனம் (ஓசி 7:5)
29. மதுபானவெறி (ஓசி 7:5)
30. பொல்லாப்பு (ஓசி 7:2; ஓசி 10:12)
31. தேவனை வெறுப்பது (ஓசி 7:13,15; ஓசி 9:7-9)
32. அக்கிரமம் (ஓசி 7:1)
33. பொல்லாப்பு நினைப்பது (ஓசி 7:15)
34. வஞ்சிப்பது (ஓசி 7:16; ஓசி 11:12)
35. நாவினுடைய உக்கிரம் (ஓசி 7:16)
36. புத்தியின்மை (ஓசி 7:11)
37. அகந்தை (ஓசி 7:10,14; ஓசி 11:5)
38. அவிசுவாசம் (ஓசி 8:14)
39. பக்தியின்மை (ஓசி 8:12; ஓசி 10:3)

**4 அதிகாரம்**

40. பாவம் செய்வதற்கு பலிபீடங்களைச் செய்வது. (ஓசி 8:11)

41. சுயசித்தம் (ஓசி 8:4; ஓசி 10:13)

42. பணையத்தை நாடுவது (ஓசி 9:1)

43. தீட்டுள்ளதைப் புசிப்பது (ஓசி 9:3)

44. ஆண்புணர்ச்சி (ஓசி 9:9)

45. தவறான பாதையில் செல்லுதல் (ஓசி 9:7-9)

46. சுயநலம் (ஓசி 10:1,13)

47. கனிதராமை (ஓசி 10:1)

48. இருமனம் (ஓசி 10:2)

49. பொய்யாணையிடுதல் (ஓசி 10:4)

50. தேவனை விட்டு விலகுதல் (ஓசி 11:7)

51. அசுத்தமானதோடு உடன்படிக்கை பண்ணுதல் (ஓசி 12:1)

52. தேவனுக்குக் கோபமுண்டாக்குதல் (ஓசி 12:4)

53. பேராசை (ஓசி 12:8)

54. சுயபாதுகாப்பு (ஓசி 13:9)

55. விவேகமில்லாமல் நடப்பது (ஓசி 13:13)

**2. இஸ்ரவேல்மீது எட்டு அம்ச நியாயத்தீர்ப்பு**

ஓசி 4:3 இதினிமித்தம் தேசம் புலம்பும்; அதில் குடியிருக்கிற அனைவரோடுங்கூட மிருக ஜீவன்களும் ஆகாயத்துப் பறவைகளும் தொய்ந்துபோகும்; கடலின் மச்சங்களும் வாரிக்கொள்ளப்படும்.

ஓசி 4:4 ஆகிலும் ஒருவனும் நியாயத்தைக் காண்பிக்கவும், ஒருவனும் அவர்களைக் கடிந்துகொள்ளவும் கூடாது; உன் ஜனங்கள் ஆசாரியனோடே வழக்காடுகிறவர்களைப் போல இருக்கிறார்கள்.

ஓசி 4:5 ஆகையால் நீ பகலிலே இடறிவிழுவாய்; இரவிலே உன்னோடே கூடத் தீர்க்கதரிசியும் இடறிவிழுவான்; உன் தாயை நான் சங்காரம்பண்ணுவேன்.

"உன் தாய்" - இந்த வாக்கியம் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் குறிக்கும்.

**3. இஸ்ரவேலின் எட்டு அம்ச ஆவிக்குரிய நிலையும் நீதிநெறி நிலையும் - எட்டு அம்ச நியாயத்தீர்ப்பு** - (ஏசா 1:5)

ஓசி 4:6 என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.

ஓசி 4:7 அவர்கள் எவ்வளவாய்ப் பெருகினார்களோ, அவ்வளவாய் எனக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தார்கள்; அவர்களுடைய மகிமையை இலச்சையாக மாறப்பண்ணுவேன்.

ஓசி 4:8 அவர்கள் என் ஜனத்தின் பாவத்தைத் தின்று, அவர்களுடைய அக்கிரமத்தின் பேரில் பசிதாகமாயிருக்கிறார்கள்.

ஓசி 4:9 ஆதலால் ஜனங்களுக்கு எப்படியோ ஆசாரியனுக்கும் அப்படியே; அவர்கள் வழிகளின்படி நான் அவர்களை விசாரித்து, அவர்கள் கிரியைகளின்படி அவர்களுக்குப் பலனளிப்பேன்.

ஓசி 4:10 அவர்கள் கர்த்தரை மதியாமலிருக்கிறபடியினால் அவர்கள் தின்றாலும் திருப்தியடையாதிருப்பார்கள்; அவர்கள் வேசித்தனம் பண்ணினாலும் பலுகாதிருப்பார்கள்.

## 4 அதிகாரம்

ஓசி 4:11 வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும்.

"அறிவு" - தேவனுடைய அறிவும், அவருடைய வழிகளும்.

பாவம் (sin) - חַטָּאָה - khat-taw-aw' - 2403

பெ.பெ.சொ.-பாவம், துரோகம், பாதகம், பாவநிவாரணம், ஆக்கினை, பாவநிவர்த்தி, சுத்திகரித்தல், சுத்தமாயிருத்தல், காணிக்கை, பாவநிவாரண பலி - இந்த வார்த்தை "பாவநிவாரண பலி" "sin offering" என்றும் 116 இடங்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இது தகனபலியாகும். ஆனால் ஜனங்களோ பாவநிவாரண பலிகளைப் புசிக்கிறார்கள். *(லேவி 6:26,30).*

### 4. இஸ்ரவேலின் ஏழு அம்ச விக்கிரகாராதனை - நான்கு அம்ச நியாயத்தீர்ப்பு

ஓசி 4:12 என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப்பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள்.

ஓசி 4:13 அவர்கள் மலையுச்சியில் பலியிட்டு, மேடுகளிலே கர்வாலி மரங்களின் கீழும், புன்னைமரங்களின் கீழும், அரசமரங்களின் கீழும், அவைகளின் நிழல் நல்லதென்று, தூபங் காட்டுகிறார்கள்; இதினிமித்தம் உங்கள் குமாரத்திகள் வேசித்தனமும், உங்கள் மருமக்கள்மார் விபசாரமும் செய்கிறார்கள்.

ஓசி 4:14 உங்கள் குமாரத்திகள் வேசித்தனம் செய்கிறதினிமித்தமும், உங்கள் மருமக்கள்மார் விபசாரம் செய்கிறதினிமித்தமும், நான் அவர்களை தண்டியாமலிருப்பேனோ? அவர்கள் விலகி வேசிகளோடே கூடப்போய் தாசிகளோடே பலி யிடுகிறார்கள்; உணர்வில்லாத ஜனங்கள் அதினால் சிக்குண்டு விழுவார்கள்.

"கட்டை" - மரத்தினால் செய்யப்பட் விக்கிரகம்.

"கோல்" - குறிசொல்லுவதற்குப் பயன் படுத்தப்படும் கோல்.

"சோரமார்க்கம் போனார்கள்" - விக்கிரகாராதனையில் தங்களை ஈடுபடுத்துகிறார்கள். *(எசே 23:5).*

"உங்கள் குமாரத்திகள் வேசித்தனம் செய்கிறதினிமித்தம்" - அவர்களுடைய குமாரத்திகள் தேவதாசிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய ஸ்திரீகள் வேசித்தனம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய புருஷர்கள் வேசிகளோடே கூடப்போகிறார்கள். தாசிகளோடே விக்கிரகங்களுக்குப் பலியிடுகிறார்கள். இவ்வாறாக முழு தேசமும் பாவத்தில் விழுந்திருக்கிறது.

"நான் அவர்களை தண்டியாமலிருப்பேனோ?" - இப்படிப்பட்ட பாவிகளைக் கர்த்தர் அவர்களுடைய வழிகளிலேயே விட்டுவிடுகிறார். இவர்கள் தங்கள் வழிகளிலேயே அழிந்து விடுவார்கள்.

### 5. யூதாவுக்கு எச்சரிப்பு

ஓசி 4:15 இஸ்ரவேலே, நீ சோரம்போனாலும், யூதாவாகிலும் அந்தப் பாவத்துக்குள்ளாகாதிருப்பதாக; கில்காலுக்கு வராமலும், பெத்தாவேனுக்குப் போகாமலும் கர்த்தருடைய ஜீவனாணை என்று ஆணையிடாமலும் இருப்பீர்களாக.

# ஓசியா - தொகுப்புரை

## 4 அதிகாரம்

ஓசி 4:16 இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப் போல் அடங்காதிருக்கிறது; இப்போது கர்த்தர் அவர்களை விஸ்தாரமான வெளியிலே ஆட்டுக்குட்டியைப்போல் மேய்ந்து அலையப்பண்ணுவார்.

ஓசி 4:17 எப்பிராயீம் விக்கிரகங் களோடு இணைந்திருக்கிறான், அவனைப் போகவிடு.

ஓசி 4:18 அவர்களுடைய மதுபானம் புளித்தது, அவர்கள் எப்போதும் சோரம்போகிறார்கள்; அவர்களுடைய அதிபதிகள் தாருங்களென்று இலச்சையானதை நாடுகிறார்கள்.

ஓசி 4:19 காற்று அவர்களைத் தன் செட்டைகளில் இறுகப் பிடிக்கும்; அவர்கள் தங்கள் பலிகளால் வெட்கப்படுவார்கள்.

"நீ சோரம்போனாலும், யூதாவாகிலும் அந்தப் பாவத்துக்குள்ளாகாதிருப்பதாக" - எப்பிராயீம் தேசமாகிய வடக்கு இஸ்ரவேல் தேசம் பாவத்தில் விழுந்து சோரம்போயிற்று. யூதா தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தாரிடமிருந்து ஒரு நல்ல பாடத்தைப் படித்துக் கொண்டு, அவர்கள் செய்யும் பாவங்களுக்குத் தங்களை உட்படுத்தக் கூடாது. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். ஆனால் யூதா தேசத்தாரோடு இஸ்ரவேல் தேசத்தாரிடமிருந்து பாடத்தைப் படித்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவில்லை. சமாரியா அழிந்தது. யூதா தேசத்தாரும், 133 வருஷங்களுக்குப் பின்பு அழிந்தார்கள். (2இராஜா 17-25). யூதா தேசத்தார் கில்காலுக்குப் போகக்கூடாது. அங்கு யெரொபெயாம் விக்கிரகத்திற்கு ஆலயத்தைக் கட்டியிருக்கிறான். பல வருஷங்களுக்கு முன்பு எப்பிராயீம் தேசத்தார் கர்த்தரைவிட்டு விலகிப் போய்விட்டார்கள்.

யூதா தேசத்தார் விக்கிரகங்களைப் பின்பற்றி, கர்த்தரை மறுதலித்துவிடக்கூடாது. மேலும் யூதா தேசத்தார் பெத்தாவேனுக்கும் போகக்கூடாது.இந்த வார்த்தைக்கு "விக்கிரகத்தின் வீடு" என்று பொருள். இங்கு யெரொபெயாம் பொன்கன்றுக்குட்டியை நிறுவியிருக்கிறான். பெத்தேலுக்கு இணையாக யெரொபெயாம் பெத்தாவேனை நிறுவினான். பெத்தேல் என்பதற்கு "தேவனுடைய வீடு" என்று பொருள். (1இராஜா 12:28-33; 1இராஜா 13:1; ஆமோ 3:14).

"இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப் போல் அடங்காதிருக்கிறது" - இஸ்ரவேல் தேசத்தார் இறுமாப்பாய் இருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறார்கள். கர்த்தருக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள்.

"கர்த்தர் அவர்களை விஸ்தாரமான வெளியிலே ஆட்டுக்குட்டியைப்போல் மேய்ந்து அலையப் பண்ணுவார்" - கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாரைப் புறஜாதியார் மத்தியில் சிதறிப்போக அனுமதிப்பார்.

"எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான்" - எப்பிராயீம் விக்கிரகங்களோடு திருமண உறவில் இருக்கிறான். அந்த விக்கிரகங்களிடமிருந்து இவர்களால் தள்ளுதற்சீட்டைப் பெற்று, விலகி வரமுடியாது.

"அவர்களுடைய அதிபதிகள் தாருங்களென்று இலச்சையானதை நாடுகிறார்கள்" - எப்பிராயீமின் அதிபதிகள் விக்கிரகங்களுக்கும் பலியிட விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்துவதில்லை.

"அவர்கள் தங்கள் பலிகளால் வெட்கப் படுவார்கள்" - வேசித்தனத்தின் ஆவி அவர்களை இறுகப் பிடித்திருக்கிறது. ஆகையினால் அவர்கள் தங்களுடைய விக்கிரகாராதனையினால் வெட்கப்படுவார்கள்.

## 5 அதிகாரம்

### 6. இஸ்ரவேலுக்கு அழைப்பு

ஓசி 5:1 ஆசாரியர்களே, இதைக் கேளுங்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, கவனியுங்கள்; ராஜாவின் வீட்டாரே, செவிகொடுங்கள்; இந்த நியாய விசாரிப்பு உங்கள்மேல் செல்லும்; நீங்கள் மிஸ்பாவில் கண்ணியும் தாபோரின்மேல் விரிக்கப்பட்ட வலையுமானீர்கள்.

ஓசி 5:2 நெறிதவறினவர்கள் மிகுதியும் வதை செய்கிறார்கள்; அவர்கள் எல்லாரையும் நான் தண்டிப்பேன்.

**தீர்க்கதரிசன எண் - 7**

"ஆசாரியர்களே, இதைக் கேளுங்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, கவனியுங்கள்....." (ஓசி 5:1-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. இஸ்ரவேலும் எப்பிராயீமும் தங்கள் அக்கிரமத்தினால் இடறுண்டு விழுவார்கள். (ஓசி 5:5).
2. அவர்களோடே யூதாவும் இடறுண்டு விழுவான்.
3. அவர்கள் கர்த்தரைத் தேடும்படி தங்கள் ஆடுகளோடும் தங்கள் மாடுகளோடும் போவார்கள் (ஓசி 5:6).
4. ஒரு மாதத்துக்குள்ளாக அவர்கள் தங்கள் பங்குகளோடே பட்சிக்கப்படுவார்கள். (ஓசி 5:7).
5. தண்டிப்பின் நாளிலே எப்பிராயீம் பாழாவான் (ஓசி 5:9).
6. அவர்கள்மேல் என் உக்கிரகோபத்தைத் தண்ணீரைப்போல ஊற்றுவேன். (ஓசி 5:10).
7. நான் எப்பிராயீமுக்குப் பொட்டரிப்பைப் போல இருப்பேன். (ஓசி 5:12).
8. யூதாவின் வீட்டுக்கு உளுப்பைப்போல இருப்பேன்.
9. நான் எப்பிராயீமுக்குச் சிங்கம் போல இருப்பேன். (ஓசி 5:14)
10. யூதாவின் வம்சத்தாருக்குப் பாலசிங்கம்போல இருப்பேன்
11. நான் அவர்களைப் பீறிவிட்டுப் போய்விடுவேன்.
12. அவர்களை தப்புவிப்பார் யாரும் இருக்கமாட்டார்கள்.
13. அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன் (ஓசி 5:15).
14. தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள்.

"ராஜாவின் வீட்டாரே, செவிகொடுங்கள்" - தேசமும், ராஜாவும் ஒரே மாதிரியாகப் பாவம் செய்திருக்கிறார்கள். (ஓசி 5:1-2) ஓசியாவின் புஸ்தகத்தை "இஸ்ரவேலுடைய பாவங்களின் பட்டியல்" என்று அழைக்கலாம்.

"தாபோர்" (Tabor) - இது எப்பிராயீமில் இல்லை. இந்தப் பெயரின் பொருள் "மேடு" "mound" என்பதாகும். இந்த மேட்டின்மீது விக்கிரகாராதனையின் பலிபீடம் உள்ளது. இது மிஸ்பா (Mizpah) என்று அழைக்கப்படுகிறது. இது இஸ்ரவேலருக்குக் கண்ணியாயிற்று.

### 7. இஸ்ரவேலின் பாவங்களும் யூதாவின் பாவங்களும்

ஓசி 5:3 எப்பிராயீமை நான் அறிவேன், இஸ்ரவேல் எனக்கு மறைவானதல்ல; எப்பிராயீமே, இப்போது நீ சோரம் போனாயே, இஸ்ரவேல் தீட்டுப்பட்டதே.

## 5 அதிகாரம்

ஓசி 5:4 அவர்கள் தங்கள் தேவனிடத்துக்குத் திரும்புவதற்குத் தங்கள் கிரியைகளைச் சீர்திருத்த மாட்டார்கள், வேசித்தன ஆவி அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது; கர்த்தரை அறியார்கள்.

ஓசி 5:5 இஸ்ரவேலின் அகந்தை அவர்கள் முகத்துக்கு முன்பாகச் சாட்சியிடுகிறது; ஆகையால் இஸ்ரவேலும் எப்பிராயீமும் தங்கள் அக்கிரமத்தினால் இடறுண்டு விழுவார்கள்; அவர்களோடே யூதாவும் இடறுண்டு விழுவான்.

ஓசி 5:6 அவர்கள் கர்த்தரைத் தேடும்படி தங்கள் ஆடுகளோடும் தங்கள் மாடுகளோடும் போவார்கள்; அவரைக் காணமாட்டார்கள்; அவர் அவர்களை விட்டு விலகினார்.

ஓசி 5:7 கர்த்தருக்கு விரோதமாக துரோகம் பண்ணினார்கள்; அந்நிய பிள்ளைகளைப் பெற்றார்கள்; இப்போதும் ஒரு மாதத்துக்குள்ளாக அவர்கள் தங்கள் பங்குகளோடே பட்சிக்கப்படுவார்கள்.

ஓசி 5:8 கிபியாவிலே எக்காளத்தையும், ராமாவிலே பூரிகையையும் ஊதுங்கள்; பெத்தாவேனிலே கதறுங்கள்; பென்யமீனே உன்னைப் பின்தொடருகிறார்கள்.

ஓசி 5:9 தண்டிப்பின் நாளிலே எப்பிராயீம் பாழாவான்; நிச்சயமாய் வரப்போகிறதை இஸ்ரவேலின் கோத்திரங்களுக் குள்ளே அறிவிக்கிறேன்.

ஓசி 5:10 யூதாவின் பிரபுக்கள் எல்லைகளை ஒதுக்குகிறவர்களுக்கு ஒப்பானார்கள்; அவர்கள்மேல் என் உக்கிரகோபத்தைத் தண்ணீரைப்போல ஊற்றுவேன்.

ஓசி 5:11 எப்பிராயீம் தகாத கற்பனையை மனதாரப் பின்பற்றிப்போனபடியால் அவன் ஒடுங்குண்டு, நியாயவிசாரணையில் நொறுக்கப்பட்டுப்போகிறான்.

ஓசி 5:12 நான் எப்பிராயீமுக்குப் பொட்டரிப்பைப்போலவும், யூதாவின் வீட்டுக்கு உளுப்பைப்போலவும் இருப்பேன்.

ஓசி 5:13 எப்பிராயீம் தன் வியாதியையும், யூதா தன் காயத்தையும் கண்டபோது, எப்பிராயீம் அசீரியனண்டைக்குப் போய் யாரேப் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பினான்; ஆனாலும் உங்களைக் குணமாக்கவும் உங்களில் இருக்கிற காயத்தை ஆற்றவும் அவனால் கூடாமற்போயிற்று.

ஓசி 5:14 நான் எப்பிராயீமுக்குச் சிங்கம் போலவும், யூதாவின் வம்சத்தாருக்குப் பாலசிங்கம்போலவும் இருப்பேன்; நான் நானே பீறிவிட்டுப் போய்விடுவேன்; தப்புவிப்பார் இல்லாமல் எடுத்துக்கொண்டு போவேன்.

ஓசி 5:15 அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன்; தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள்.

"எப்பிராயீம்" - வடக்கு ராஜ்யத்திலுள்ள பத்து கோத்திரத்தாரைக் குறிப்பதற்கு இந்தப் பெயர் பயன்படுத்தப்படுகிறது. இதுபோலவே தெற்கு ராஜ்யத்தைக் குறிப்பதற்கு யூதா என்னும் பெயரும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஓசி 5:3,5,9-15).

"ஒரு மாதத்துக்குள்ளாக" - தீர்க்கதரிசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள சம்பவங்களெல்லாம் ஒரு மாதத்திற்குள் நிறைவேறும்.

"பெத்தாவேன்" (Bethaven) - இதற்கு "விக்கிரகத்தின் வீடு" "house of naught" அல்லது "வெறுமை, மாயையின் வீடு" என்று பொருள். யெரொபெயாம் இங்கு இரண்டு பொன்கன்றுக்குட்டிகளில் ஒன்றை நிறுவி, ஜனங்களை விக்கிரகாராதனை செய்யுமாறு வழிநடத்தினான். (1இராஜா 12:28-33; 1இராஜா 13:1).

# ஓசியா - தொகுப்புரை

## 5 அதிகாரம்

"யூதாவின் பிரபுக்கள் எல்லைகளை ஒதுக்குகிறவர்களுக்கு ஒப்பானார்கள்" - எப்பிராயீம் தேசத்தார் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனார்கள். யூதாவின் பிரபுக்களும் அவர்களுக்கு ஒப்பாக இருக்கிறார்கள். ஆகையினால் இவ்விரண்டு தேசங்களுமே அழிக்கப்படும்.

"தகாத கற்பனை" - இது யெரொபெயாமின் கற்பனை. இவன் பொன்கன்றுக்குட்டிகளை ஆராதிக்க வேண்டுமென்றும், விக்கிரகாராதனை செய்ய வேண்டுமென்றும் எப்பிராயீம் ஜனங்களுக்குத் தகாத கற்பனையைக் கொடுத்தான். (1இராஜா 12:28; 2இராஜா 10:29-31).

**தேவன் எப்பிராயீமோடு தம்மை ஒப்புமைப் படுத்தும் விதம்**

1. பொட்டரிப்பு (ஓசி 5:12)
2. உளுப்பு (ஓசி 5:12)
3. சிங்கம் (ஓசி 5:14; ஓசி 11:10)
4. பாலசிங்கம் (ஓசி 5:14)
5. மழை (ஓசி 6:3)
6. முன்மாரியும், பின்மாரியும் (ஓசி 6:3)
7. உழவர் (ஓசி 11:4)
8. சிவிங்கி (ஓசி 13:7)
9. குட்டிகளை பறிகொடுத்த கரடி (ஓசி 13:8)
10. பனி (ஓசி 14:5)

"பொட்டரிப்பைப்போலவும்,.......உளுப்பைப்போலவும்" - பொட்டரிப்புகள் வஸ்திரங்களைப் பாழாக்கும். மரத்தை உளுத்துப்போக வைக்கும். வஸ்திரங்களுக்கும், மரங்களுக்கும் இந்தப் பூச்சிகள் மறைவாக இருக்கும். வெளியே தெரியாது. ஆயினும் கொஞ்சம் கொஞ்சமாக வஸ்திரங்களை இவை அரித்துப்போடும். மரங்களை உளுத்துப்போக வைக்கும். கர்த்தர் எப்பிராயீமின்மீதும், யூதாவின்மீதும் இதுபோல நியாயத்தீர்ப்பை அனுப்புவார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மெதுவாக வரும். வஸ்திரம் விரைவில் அரித்துவிடும். அதுபோல இஸ்ரவேல் முதலாவதாகப் பாழாக்கப்படும். மரம் சற்று காலதாமதமாக உளுத்துப்போகும். யூதா தேசம் இஸ்ரவேலுக்குப் பின்பு சிறிது காலம் கழித்து, பாழாக்கப்படும். மனுஷர் பாவம்செய்யும்போது கர்த்தர் அவர்களை விட்டு விலகிப்போகிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம்செய்யும்போது ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போகிறார்கள்.

"யாரேப்" (Jareb) - இது திகிலாத்பிலேசரின் (Tiglath-pileser) மறுபெயராகும். இவன் எப்பிராயீமையும், யூதாவையும் தண்டித்தான். (2இராஜா 15:27-31; 2இராஜா 16:7-10). பொட்டரிப்பும், உளுப்பும் இஸ்ரவேலின்மீதும், யூதாவின் மீதும் கிரியை நடப்பித்தன. அதன் பின்பு, கர்த்தர் எப்பிராயீமின் மீது சிங்கத்தைப் போல வந்து, அதை அழித்துப்போட்டார். (2இராஜா 17) அதன் பின்பு அவர் யூதாவின்மீது பாலசிங்கம்போல வந்து அதையும் அழித்துப்போட்டார். (2இராஜா 24-25).

"அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும்" - எப்பிராயீம் புத்திரரும், யூதாபுத்திரரும் தங்கள் குற்றங்களை உணர்ந்து கர்த்தரைத் தேடவேண்டும். அதுவரையிலும் கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திற்குத் திரும்பப் போய்விடுவார். (சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

## 6 அதிகாரம்

**III. கடைசி நாட்களில் இஸ்ரவேல் மனந்திருந்துவது குறித்த தீர்க்கதரிசனம்** - *(சக 12:10-14; ரோம 11:25-29)*

ஓசி 6:1 கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார்.

ஓசி 6:2 இரண்டுநாளுக்குப் பின்பு அவர் நம்மைப் உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்.

ஓசி 6:3 அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப் போலவும், பூமியின் மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்.

**தீர்க்கதரிசன எண் - 8**

"கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்...." (ஓசி 6:1-3) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

**நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்**

1. அவர் நம்மைக் குணமாக்குவார். (ஓசி 6:1).

2. அவர் நம்முடைய காயங்களைக் கட்டுவார்.

3. இரண்டுநாளுக்குப் பின்பு அவர் நம்மைப் உயிர்ப்பிப்பார் (ஓசி 6:2).

4. மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்.

5. நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்.

6. அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம் (ஓசி 6:3).

7. அவர் மழையைப்போலவும், பூமியின் மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்.

"கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்" - கடைசி நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் இந்த வாக்கியத்தைக் கூறுவார்கள். இது கோமேர் மூலமாக அடையாளமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. (ஓசி 3:2-3) மேலும் இந்தச் சம்பவம் ஓசி 3:5 ஆவது வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

"இரண்டுநாளுக்குப் பின்பு அவர் நம்மைப் உயிர்ப்பிப்பார்" - அதன்பின்பு மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார் என்று ஓசியா கூறுகிறார். இந்த நாட்களை 24 மணிநேரம் கொண்ட நாளாகவே வியாக்கியானம் பண்ண வேண்டும். சக 12:10-13:1 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் புலம்பல் இக்காலத்தில் நிறைவேறும். இரண்டு நாட்கள் புலம்பிய பின்பு, மூன்றாம் நாளில் பாவத்தையும், அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஓர் ஊற்று உண்டாயிருக்கும். இஸ்ரவேல் தேசத்தார் எல்லோருமே இரட்சிக்கப் படுவார்கள். (ரோமர் 11:25-29).

"அவருடைய சமுகத்தில்" - இதுவரையிலும் அவருடைய சமுகத்தில் நாம் பாவத்தில் பிழைத்திருந்தோம். இனிமேல் அவருடைய சமுகத்தில் நாம் நீதியில் பிழைத்திருப்போம். (ஓசி 7:2).

"பிழைத்திருப்போம்" - நித்திய ஜீவனில் மறுபடியும் பிழைத்திருப்பதை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. (எபே 2:1-10).

"அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்" - மூன்று நாட்கள் தேசம் புலம்பிய பின்பு, அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்பதற்காக எழுப்பப்பட்ட பின்பு நாம் அறியும்படி தொடர்ந்து போவோம். (ஓசி 6:2).

**6 அதிகாரம்**

"அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது" - தேவனுடைய திட்டத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை உறுதிபண்ணப்பட்டதாக உள்ளது. அவர் வரும் காலமும், உறுதிபண்ணப்பட்டுள்ளது. அருணோதயம் காலையில் புறப்படுவதுபோல கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், குறிப்பிட்ட காலத்தில் உறுதியாக இருக்கும். (ஆதி 1:14-19; ஆதி 8:22). அவருடைய வருகை மழையைப் போல இருக்கும். இஸ்ரவேல் தேசத்தார் நீண்ட காலமாக வறண்ட பூமியைப்போல இருக்கிறார்கள். அவர்கள்மீது கர்த்தர் முன்மாரியையும், பின்மாரியையும் போல வந்து, அவர்களை ஆசீர்வதிப்பார்.

"முன்மாரி" - விதைப்புக்காலத்தில் பெய்யும் மழை முன்மாரி என்று அழைக்கப்படுகிறது. விதை விதைப்பதற்கும், பயிர் வகைகளை ஆரம்ப நாட்களில் வளர்ப்பதற்கும் முன்மாரி பயன்படும். பின்மாரி என்பது அறுவடை காலத்தில் பெய்யும் மழையாகும். தானியங்கள் நன்றாக வளர்ச்சி அடைவதற்கும், கனிகள் நன்றாக வளம் பெறுவதற்கும் இந்தப் பின்மாரி உதவி புரியும். ஆவிக்குரிய ரீதியாக கர்த்தர் இஸ்ரவேல்மீது முன்மாரியாகவும், பின்மாரியாகவும் வந்து இஸ்ரவேல் தேசத்தை முழுவதுமாக அறுவடை செய்வார். (சக 10:1; சக 12:10-13:1; ரோமர் 1:25-29).

## IV. இஸ்ரவேலுக்கு எதிராக தேவனுடைய வழக்கு - (6:4-13:8; 4:1; ஏசா 1:2)

### 1. தெய்வீக பொறுமை

ஓசி 6:4 எப்பிராயீமே, உனக்கு என்ன செய்வேன்? யூதாவே, உனக்கு என்ன செய்வேன்? உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற் காலையில் தோன்றும் பனியைப்போலவும் ஒழிந்து போகிறது.

"உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போல" - காலை மேகம் விரைவில் அகன்றுபோகும். விடியற்காலையில் தோன்றும் பனியும் சூரியன் வரும்போது விரைவில் ஒழிந்துபோகும். இஸ்ரவேல் தேசத்தாருடைய பக்தியும் இதுபோல தற்காலிகமாகவே இருக்கிறது. விரைவில் ஒழிந்துபோகும்.

### 2. இஸ்ரவேல்மீது மூன்று அம்ச நியாயத்தீர்ப்பு

ஓசி 6:5 ஆகையால் தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களை வெட்டினேன்; என் வாய்மொழிகளைக்கொண்டு அவர்களை அதம்பண்ணினேன்; உன்மேல் வரும் தண்டனைகள் வெளிச்சத்தைப்போல் வெளிப்படும்.

### 3. இஸ்ரவேலின் ஆவிக்குரிய பாவங்கள்

ஓசி 6:6 பலியை அல்ல இரக்கத்தையும், தகன பலி களைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்.

ஓசி 6:7 அவர்களோ ஆதாமைப்போல் உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள்.

ஓசி 6:8 கீலேயாத் அக்கிரமம் செய்கிறவர்களின் பட்டணம்; அது இரத்தக்காலடிகளால் மிதிக்கப் பட்டிருக்கிறது.

ஓசி 6:9 பறிகாரரின் கூட்டங்கள் ஒருவனுக்குக் காத்திருக்கிறதுபோல, சீகேமுக்குப்போகிற வழியிலே கொலை செய்கிற ஆசாரியரின் கூட்டம் காத்திருக்கிறது; தோஷமான காரியங்களையே செய்கிறார்கள்.

ஓசி 6:10 பயங்கரமான காரியத்தை இஸ்ரவேல் வம்சத்தாரில் கண்டேன்; அங்கே எப்பிராயீமின் வேசித்தனம் உண்டு; இஸ்ரவேல் தீட்டுப்பட்டுப் போயிற்று.

# ஓசியா - தொகுப்புரை

## 6 அதிகாரம்

ஓசி 6:11 யூதாவே, உனக்கு ஒரு அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

"பலியை அல்ல இரக்கத்தையும், தகன பலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்" - இந்த வாக்கியம் மத் 9:13; மத் 12:7 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அவர்களோ ஆதாமைப்போல் உடன்படிக்கையை மீறி" - அவர்கள் என்பது ஓசி 5,9 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசிகளையும், ஆசாரியர்களையும் குறிக்கும் வார்த்தையாகும்.

"அறுப்புக்காலம்" - நியாயத்தீர்ப்பின் அறுப்புக்காலம்.

## 7 அதிகாரம்

### 4. பாவங்களும் உள்நாட்டு கலகங்களும்

ஓசி 7:1 நான் என் ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போதும், நான் இஸ்ரவேலை குணமாக்க விரும்பும் போதும், எப்பிராயீமின் அக்கிரமமும் சமாரியாவின் பொல்லாப்புகளும் வெளிப் படுத்தப்படும்; அவர்கள் வஞ்சனை செய்கிறார்கள்; திருடன் உள்ளே வருகிறான்; வெளியே பறிகாரரின் கூட்டத்தார் கொள்ளையிடுகிறார்கள்.

ஓசி 7:2 அவர்கள் பொல்லாப்பையெல்லாம் நான் நினைவில் வைத்திருக்கிறேன் என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சிந்திக்கிறதில்லை; இப்போதும் அவர்களுடைய கிரியைகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டது; அவைகள் என் முகத்துக்கு முன் இருக்கிறது.

ஓசி 7:3 ராஜாவைத் தங்கள் பொல்லாப்பினாலும், அதிபதிகளைத் தங்கள் பொய்களினாலும் சந்தோஷப் படுத்துகிறார்கள்.

ஓசி 7:4 அவர்கள் எல்லாரும் விபசாரக்கள்ளர்; அப்பஞ்சுடுகிறவன் எரிக்கும் அடுப்பைப்போல் இருக்கிறார்கள்; அவன் மாவைப் பிசைந்ததுமுதல் அது உப்பிப் போகுமட்டும், அனலை மூட்டாமல் ஓய்ந்திருக்கிறான்.

ஓசி 7:5 நம்முடைய ராஜாவின் நாளென்று சொல்லி, அதிபதிகள் திராட்சரசத் துருத்திகளால் அவனுக்கு வியாதியுண்டாக்கு கிறார்கள்; சரசக்காரரோடேகூட அவன் தன் கையை நீட்டுகிறான்.

ஓசி 7:6 அவர்கள் பதிவிருக்கும்போது, தங்கள் இருதயத்தை அடுப்பைப்போல் ஆயத்தப் படுத்துகிறார்கள்; அவர்களில் அடுப்பு மூட்டுகிறவன் இராமுழுதும் தூங்கினாலும், காலமேயோவென்றால் அது ஜுவாலிக்கிற அக்கினியாய் எரியும்.

ஓசி 7:7 அவர்கள் எல்லாரும் அடுப்பைப்போல அனலாகி, தங்கள் நியாயாதிபதிகளைப் பட்சித்தார்கள்; அவர்களுடைய ராஜாக்கள் எல்லாரும் விழுந்தார்கள்; அவர்களில் என்னை நோக்கிக்கூப்பிடுகிறவன் ஒருவனும் இல்லை.

"சமாரியா" - இது எப்பிராயீமின் தலைநகரம். ஓசி 7 ஆவது அதிகாரத்தில் எப்பிராயீமின் ஜனங்களுடைய பாவங்களும், அவர்களுடைய பிரபுக்களின் பாவங்களும் வரிசையாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அப்பஞ்சுடுகிறவன் எரிக்கும் அடுப்பைப் போல் இருக்கிறார்கள்" - எரிக்கும் அடுப்பில் அதிகமாகச் சூடு ஏறியபின்பு, அந்த அடுப்பிலுள்ள நெருப்பை அணைப்பது கடினம். துன்மார்க்கர்கள் அடுப்புக்கு ஒப்புமையாக மூன்று இடங்களில் கூறப்பட்டிருக்கிறார்கள். (ஓசி 7:4,6,7).

### 5. தேசங்கள்மீது நம்பிக்கை வைப்பது

ஓசி 7:8 எப்பிராயீம் அந்நிய ஜனங்களோடே கலந்திருக்கிறான்; எப்பிராயீம் திருப்பிப் போடாத அப்பம்.

ஓசி 7:9 அந்நியர் அவனுடைய பலத்தைத் தின்கிறார்கள்; அவனோ அதை அறியான்; நரைமயிரும் அவனில் தெளித்திருக்கிறது, அவனோ அதை அறியாதிருக்கிறான்.

ஓசி 7:10 இஸ்ரவேலின் அகந்தை அவர்கள் முகத்துக்கு முன்பாகச் சாட்சியிட்டாலும், அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பாமலும், இவை எல்லாவற்றிலும் அவரைத்தேடாமலும்இருக்கிறார்கள்.

ஓசி 7:11 எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான், அவனுக்குப் புத்தியில்லை; எகிப்தியனைக் கூப்பிடுகிறார்கள்; அசீரியனிடத்துக்கும் போகிறார்கள்.

### இஸ்ரவேலின் ஒப்புமைகள்

1. சோரஸ்திரீ (ஓசி 1:2)
2. விலக்கி வைக்கப்பட்டவள் (ஓசி 2:1-13)

ஓசியா – தொகுப்புரை

**7 அதிகாரம்**

3. விலக்கி வைக்கப்பட்டு மறுபடியும் திருமணம் செய்துகொண்டவள் (ஓசி 2:14-23; ஓசி 3:1-5)

4. அடங்காத கிடாரி (ஓசி 4:16)

5. பறிகாரரின் கூட்டங்கள் (ஓசி 6:9)

6. எரிக்கும் அடுப்பு (ஓசி 7:4-7)

7. திருப்பிப்போடாத அப்பம் (ஓசி 7:8)

8. பேதையான புறா (ஓசி 7:11)

9. மோசம்போக்குகிற வில் (ஓசி 7:16)

10. விரும்பப்படாத பாத்திரம் (ஓசி 8:8)

11. காட்டுக்கழுதை (ஓசி 8:9)

12. வனாந்தரத்திலுள்ள திராட்சைக்குலைகள் (ஓசி 9:10)

13. முதல்தரம் பழுத்த கனிகள்

14. பலனற்ற திராட்சச்செடி (ஓசி 10:1)

15. பழக்கப்பட்டு போரடிக்க விரும்புகிற கடாரி (ஓசி 10:11)

16. தரிசு நிலம் (ஓசி 10:12)

17. எகிப்திலிருந்து புறப்படும் குருவி (ஓசி 11:11)

18. அசீரியா தேசத்திலிருந்து வரும் புறா

19. காலையில் காணும் மேகம் (ஓசி 13:3)

20. விடியற்காலையில் ஒழிந்துபோகிற பனி

21. பதர்

22. புகை

23. லீலிபுஷ்பம் (ஓசி 14:5)

24. லீபனோன் (ஓசி 14:5-6)

25. ஒலிவமரம் (ஓசி 14:6)

26. தானியம் (ஓசி 14:7)

27. திராட்சரசம்

28. வாசனை

29. திராட்சச்செடி

30. பச்சையான தேவதாரு விருட்சம் (ஓசி 14:8)

**இது தேவனைத் தேடுங்காலம்**

1. அவர்கள் பொல்லாப்பையெல்லாம் தேவன் நினைவில் வைத்திருக்கிறார். (ஓசி 7:2).

2. பாவிகளுடைய அக்கிரமமும், பொல்லாப்புகளும். (ஓசி 7:1-7).

3. பாவம் கட்டுப்படுத்தவில்லையென்றால் அது கட்டுக்கடங்காத நெருப்பைப் போல இருக்கும். (ஓசி 7:6).

4. பாவத்தில் விழுந்திருக்கிறவர்கள் திருப்பிப்போடாத அப்பத்தைப்போல இருக்கிறார்கள். இது புசிப்பதற்கு பயனற்றது. (ஓசி 7:8).

5. நரைமயிர் - முதிர் வயது வருகிறது. (ஓசி 7:9).

6. தேவனைத் தேடுவதற்குத் தங்களுக்கு இன்னும் இருக்கும் கொஞ்சக் காலத்தை அறியாதிருக்கிறார்கள்.

7. இஸ்ரவேலின் அகந்தை (ஓசி 7:10; ஓசி 5:5).

"எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான்" - எப்பிராயீம் தேவனுடைய அழைப்புகளைப் புறக்கணித்து விட்டான். எப்பிராயீமிற்கு பல வேதனைகளும், பல பாடுகளும் வந்தன. ஆயினும் தன்னுடைய துன்பத்தில் எப்பிராயீம் கர்த்தரைத் தேடவில்லை.

**6. அசீரியாவிற்குச் சிறைப்பட்டுப்போதல்** - (2இராஜா 17)

ஓசி 7:12 அவர்கள் போகும்போது, என் வலையை அவர்கள்மேல் வீசுவேன்; அவர்களை ஆகாயத்துப் பறவைகளைப் போல கீழே விழப்பண்ணுவேன்; அவர்களுடைய சபையில் கேள்வியானதின் படியே அவர்களை தண்டிப்பேன்.

## 7 அதிகாரம்

ஓசி 7:13 அவர்கள் என்னைவிட்டு அலைந்து திரிகிறபடியினால் அவர்களுக்கு ஐயோ! அவர்களுக்குக் கேடுவரும்; எனக்கு விரோதமாக இரண்டகம் பண்ணினார்கள்; நான் அவர்களை மீட்டிருந்தும், அவர்கள் எனக்கு விரோதமாகப் பொய்பேசுகிறார்கள்.

ஓசி 7:14 அவர்கள் தங்கள் படுக்கைகளில் அலறுகிறபோது, தங்கள் இருதயத்தில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறதில்லை; அவர்கள் தானியத்துக்காகவும் திராட்சரசத்துக் காகவும் கூடுகிறார்கள்; என்னை வெறுத்து விலகிப்போகிறார்கள்.

ஓசி 7:15 நான் அவர்களை தண்டித்தேன்; அவர்களுடைய புயங்கள் திரும்பப் பலப்படவும்பண்ணினேன்; ஆகிலும் எனக்கு விரோதமாகப் பொல்லாப்பு நினைக்கிறார்கள்.

ஓசி 7:16 திரும்புகிறார்கள், ஆனாலும் உன்னதமானவரிடத்திற்கு அல்ல; மோசம் போக்குகிற வில்லைப்போலி ருக்கிறார்கள்; அவர்களுடைய அதிபதிகள் தங்கள் நாவினுடைய உக்கிரத்தினிமித்தம் பட்டயத்தால் விழுவார்கள்; இதுவே எகிப்து தேசத்தினிமித்தம் அவர்களுக்கு வரும் நிந்தை.

**தீர்க்கதரிசன எண் - 9**

"அவர்கள் போகும்போது, என் வலையை அவர்கள்மேல் வீசுவேன்......" (ஓசி 7:12-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. என் வலையை அவர்கள்மேல் வீசுவேன். (ஓசி 7:12).
2. அவர்களைக் கீழே விழப்பண்ணுவேன்
3. அவர்களுடைய சபையில் கேள்வியானதின்படியே அவர்களை தண்டிப்பேன்.
4. அவர்கள் என்னைவிட்டு அலைந்து திரிகிறபடியினால் அவர்களுக்கு ஐயோ. (ஓசி 7:13)
5. அவர்களுக்குக் கேடுவரும்.
6. அவர்களுடைய அதிபதிகள் தங்கள் நாவினுடைய உக்கிரத்தினிமித்தம் பட்டயத்தால் விழுவார்கள் (ஓசி 7:16).
7. இதுவே எகிப்து தேசத்தினிமித்தம் அவர்களுக்கு வரும் நிந்தையாக இருக்கும்.

"அவர்கள் என்னைவிட்டு அலைந்து திரிகிறபடியினால் அவர்களுக்கு ஐயோ" - கர்த்தரை விட்டு விலகிப்போய்விட்டால் ஜனங்களுக்குப் பாதுகாப்பில்லை. அவர்களுக்கு அழிவு வரும்.

"தங்கள் இருதயத்தில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறதில்லை" - ஜெபம் பண்ணும்போது உள்ளத்தில் உண்மையான மனந்திரும்புதல் காணப்பட வேண்டும். (ஏசா 29:13; மத் 14:8; ரோமர் 10:9-10; எபி 13:15).

**கலகக்காரரின் சுபாவங்கள்**

1. மறைவான பாவங்கள் (ஓசி 7:1)
2. வஞ்சனையும், பொய்கூறுதலும் (ஓசி 7:1,13)
3. பொல்லாப்பு சிந்திக்கும் இருதயம் (ஓசி 7:2)
4. பாவங்களில் சந்தோஷப்படுதல் (ஓசி 7:3)
5. மதுபானத்தையும், ஸ்திரீகளையும் இச்சிப்பது (ஓசி 7:4-5,14)
6. பொறுமையோடு இருந்து பாவம்செய்வது. (ஓசி 7:6)
7. ஜெபமின்மை (ஓசி 7:7,10)
8. அறியாமை (ஓசி 7:9,11)
9. பொல்லாப்பான நினைவுகள் (ஓசி 7:15)

# ஓசியா – தொகுப்புரை

## 7 அதிகாரம்

"திரும்புகிறார்கள், ஆனாலும் உன்னதமானவரிடத்திற்கு அல்ல" - எப்பிராயீம் புத்திரர் உன்னதமான தேவனிடத்தில் திரும்புகிறதற்குப் பதிலாகத் தங்களுடைய விக்கிரகங்களிடத்திற்குத் திரும்பிப்போகிறார்கள்.

"மோசம் போக்குகிற வில்லைப் போலிருக்கிறார்கள்" - வில்லைப் பயன்படுத்துகிறவன் குறிபார்த்து எறிவான். மோசம்போக்குகிற வில் அதைப் பயன்படுத்துகிறவனுடைய குறியைத் தவறச்செய்து விடும். பயன்படுத்துகிறவன் ஏமாற்றம் அடைவான். இப்படிப்பட்ட வில்லை இனிமேல் அவனால் நம்ப முடியாது.

"அவர்களுடைய அதிபதிகள் தங்கள் நாவினுடைய உக்கிரத்தினிமித்தம் பட்டயத்தால் விழுவார்கள்" - உக்கிரம் என்பதற்கான எபிரெய வார்த்தை "ஜாம்" (za'am) என்பதாகும். இது பொதுவாகத் தேவனுடைய உக்கிரக கோபத்தைக் குறிக்கும். இந்த வசனத்தில் இது தேவனுக்கு எதிரான மனுஷனுடைய கோபத்தைக் குறிக்கிறது. மனுஷருக்கு அழிவுகாலம் நெருங்கும்போது அவர்கள் புத்தி தடுமாறுவார்கள். இக்காலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய செய்திக்கு விரோதமாகப் பேசுவார்கள். மனுஷருடைய அக்கிரமம் பெருகும். அவர்கள் முழுவதுமாக அழியும் வரையிலும் அநியாயம் செய்வார்கள். யூதா புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள்.

அவர்களுடைய கடின இருதயத்தின் நிமித்தமாக நேபுகாத்நேச்சாரின் கோபம் இவர்கள்மீது வந்தது. (எரே 52:10) எப்பிராயீம் புத்திரரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால் அவர்களும் அழிவுக்கு நேராகக் கடந்து போனார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் யூதர்கள் இயேசு கிறிஸ்துவின்மீது கோபப்பட்டு, அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். இதனால் கி.பி. 70 ஆம் வருஷத்தில் எருசலேம் அழிந்தது. யூதர்கள் தேசமெங்கும் சிதறிப்போனார்கள். தங்களுடைய நாவினுடைய உக்கிரத்தின் நிமித்தம் ஜனங்கள் அழிந்துபோவார்கள். (மத் 27:25).

உக்கிரம் (rage) - **זַעַם** - **zah'-am - 2195**

பெயர்ச்சொல் - கோபம், சினம், சலிப்பு, கோபாக்கினி

"இதுவே எகிப்து தேசத்தினிமித்தம் அவர்களுக்கு வரும் நிந்தை" - எகிப்து தேசத்திலிருந்து தங்களுக்கு ஒத்தாசை வருமென்று எப்பிராயீம் தேசத்தார் அகந்தையோடு இருக்கிறார்கள். அசீரியர் எப்பிராயீமிற்கு எதிராக வந்தபோது எப்பிராயீமியர் எதிர்பார்த்தபடி எகிப்தியர் அவர்களுக்கு உதவி புரியவில்லை. எகிப்திலிருந்து உதவி வருமென்று நினைத்தார்கள். ஆனால் எகிப்திலிருந்து அவர்களுக்கு நிந்தை வந்தது.

## 8 அதிகாரம்

ஓசி 8:1 உன் வாயிலே எக்காளத்தை வை; அவர்கள் என் உடன்படிக்கையை மீறி, என் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகத் துரோகம்பண்ணின படியினால்,

ஓசி 8:2 எங்கள் தேவனே, உம்மை அறிந்திருக்கிறோம் என்று சொல்லி இஸ்ரவேலர் கூப்பிடுவார்கள்.

ஓசி 8:3 ஆனாலும் இஸ்ரவேலர் நன்மையை வெறுத்தார்கள்; சத்துரு அவர்களைத் தொடருவான்.

**தீர்க்கதரிசன எண் - 10**

"உன் வாயிலே எக்காளத்தை வை......." (ஓசி 8:1-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. கர்த்தருடைய வீட்டின்மேல் சத்துரு கழுகைப்போல் பறந்துவருகிறான். (ஓசி 8:1).
2. எங்கள் தேவனே, உம்மை அறிந்திருக்கிறோம் என்று சொல்லி இஸ்ரவேலர் கூப்பிடுவார்கள். (ஓசி 8:2)
3. சத்துரு அவர்களைத் தொடருவான். (ஓசி 8:3).
4. அவர்கள் காற்றை விதைத்து, சூறைக் காற்றை அறுப்பார்கள் (ஓசி 8:7).
5. விளைச்சல் அவர்களுக்கு இல்லை; கதிர் மாவைக் கொடுக்கமாட்டாது; கொடுத்தாலும் அந்நியர் அதை விழுங்குவார்கள்.
6. அவர்கள் இனிப் புறஜாதிகளுக்குள்ளே விரும்பப்படாத பாத்திரத்தைப்போல் இருப்பார்கள். (ஓசி 8:8).
7. அவர்கள் புறஜாதியாரைக் கூலிக்குப் பொருத்திக்கொண்டாலும், இப்பொழுது நான் அவர்களைக் கூட்டுவேன் (ஓசி 8:10).
8. அதிபதிகளின் ராஜா சுமத்தும் சுமையினால் அவர்கள் கொஞ்ச காலத்துக்குள்ளே அகப்படுவார்கள்.
9. அவர்களுடைய பலிபீடங்கள் அவர்களுக்குப் பாவமாக இருக்கின்றன. (ஓசி 8:13).
10. கர்த்தர் அவர்களுடைய அக்கிரமத்தை நினைத்து, அவர்கள் பாவத்தை விசாரிப்பார். (ஓசி 8:13).
11. அவர்கள் எகிப்துக்குத் திரும்பிப் போவார்கள்.
12. நான் அதின் நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன். (ஓசி 9:14).

"எக்காளம்" - இது யுத்தத்தின் எக்காளமாகும். (ஓசி 5:8; ஏசா 58:1).

"சத்துரு கழுகைப்போல் பறந்து வருகிறான்" - கழுகு விரைவாக வருவதுபோல சத்துரு கர்த்தருடைய வீட்டாருக்கு விரோதமாகச் சடிதியாக வருகிறான்.

"கர்த்தருடைய வீடு" - இது கர்த்தருடைய ஜனங்களைக் குறிக்கும் வார்த்தையாகும். (எபே 2:19-22; 1பேதுரு 2:5; எபி 3:6)

**எப்பிராயீமின் அழிவிற்குக் காரணம்**

1. கர்த்தருடைய உடன்படிக்கையை மீறினார்கள். (ஓசி 8:1)
2. கர்த்தருடைய நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகத் துரோகம் பண்ணினார்கள்.
3. இஸ்ரவேலர் நன்மையை வெறுத்தார்கள் (ஓசி 8:3).
4. அவர்கள் தேவனாலே அல்லாமல் ராஜாக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். (ஓசி 8:4).

## ஓசியா - தொகுப்புரை

### 8 அதிகாரம்

5. அவர்கள் தேவனாலே அல்லாமல் அதிபதிகளை வைத்துக் கொண்டார்கள்.

6. தங்கள் வெள்ளியினாலும் தங்கள் பொன்னினாலும் தங்களுக்கு விக்கிரகங்களைச் செய்வித்தார்கள்.

7. எப்பிராயீமர் நேசரைக் கூலிக்குப் பொருத்திக்கொண்டார்கள். (ஓசி 8:9).

8. எப்பிராயீமர் பாவஞ்செய்வதற்கேதுவாய் பலிபீடங்களைப் பெருகப் பண்ணினார்கள் (ஓசி 8:11).

9. வேதத்தின் மகத்துவங்களை அவர்கள் அந்நியகாரியமாக எண்ணினார்கள். (ஓசி 8:12).

10. கர்த்தருக்குச் செலுத்தும் பலிகளின் மாம்சத்தை அவர்கள் பலியிட்டுப் புசிக்கிறார்கள். (ஓசி 8:13)

11. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கின கர்த்தரை மறந்துவிட்டார்கள். (ஓசி 8:14).

12. விக்கிரகங்களுக்குக் கோவில்களைக் கட்டுகிறார்கள்.

**பாவங்களினால் வரும் சாபங்கள்**

1. யுத்தம் (ஓசி 8:1)

2. தோல்வியும், சத்துருக்களால் தொடரப் படுவதும். (ஓசி 8:3)

3. வெறுத்துவிடப்படுவது (ஓசி 8:5).

4. அவர்களுடைய விக்கிரகங்கள் துண்டு துண்டாய்ப்போகும். (ஓசி 8:6).

5. அவர்கள் சூறைக்காற்றை அறுப்பார்கள். (ஓசி 8:7).

6. அந்நியர் அவர்களுடைய விளைச்சலை அறுப்பார்கள்.

7. அவர்கள் விழுங்கப்படுவார்கள். (ஓசி 8:8).

8. அவர்கள் அந்நிய தேசத்தார் மத்தியில் சிதறிப்போவார்கள்.

9. கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார். (ஓசி 8:13).

10. அவர்களுடைய பட்டணங்களை அக்கினி பட்சிக்கும். (ஓசி 8:14).

**7. இஸ்ரவேலின் விக்கிரகாராதனை**

ஓசி 8:4 அவர்கள் ராஜாக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள், ஆனாலும் என்னாலே அல்ல; அதிபதிகளை வைத்துக் கொண்டார்கள், ஆனாலும் நான் அறியேன்; அவர்கள் வேரறுப்புண்டு போகும்படித் தங்கள் வெள்ளியினாலும் தங்கள் பொன்னினாலும் தங்களுக்கு விக்கிரகங்களைச் செய்வித்தார்கள்.

ஓசி 8:5 சமாரியாவே, உன் கன்றுக்குட்டி உன்னை வெறுத்துவிடுகிறது; என் கோபம் அவர்கள்மேல் மூண்டது; எதுவரைக்கும் சுத்தாங்கம் அடைய மாட்டாதிருப்பார்கள்?

ஓசி 8:6 அதுவும் இஸ்ரவேலருடைய செய்கையே; தட்டான் அதைச் செய்தான், ஆதலால் அது தேவன் அல்லவே, சமாரியாவின் கன்றுக்குட்டி துண்டு துண்டாய்ப்போகும்.

**மனுஷர் அடையும் மேன்மையான காரியங்கள்**

1. முதுமை (ஆதி 47:9)

2. பேரும், புகழும் (2சாமு 23:19,23; 1நாளா 11:21,25)

3. அறிவு (சங் 139:6)

4. நல்லாலோசனை (நீதி 1:5)

5. சுத்தாங்கம் (ஓசி 8:5)

6. விசுவாசத்தினாலாகும் நீதி (ரோமர் 9:30)

7. நீதிப்பிரமாணம் (ரோமர் 9:31)

## 8 அதிகாரம்

8. விசுவாசமும், ஆரோக்கியமான உபதேசமும் (1தீமோ4:6)

9. கிறிஸ்து இயேசுவிற்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருள். (பிலி 3:14)

10. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருப்பது. (பிலி 3:10)

"சமாரியாவின் கன்றுக்குட்டி" - யெரொபெயாம் பெத்தேலிலும், தாணிலும் ஒவ்வொரு பொன்கன்றுக்குட்டியை வைத்தான். இவற்றை இஸ்ரவேலின் தேவனாக்கினான். சமாரியாவின் கன்றுக்குட்டி என்பது இவ்விரண்டு கன்றுக்குட்டிகளில் ஒன்றாக இருக்கலாம் அல்லது பிற்காலத்தில் செய்யப்பட்ட வேறொரு கன்றுக்குட்டியாக இருக்கலாம். (2இராஜா 12:26-33).

### 8. இஸ்ரவேலர் சிதறிப்போனார்கள்

ஓசி 8:7 அவர்கள் காற்றை விதைத்து, சூறைக் காற்றை அறுப்பார்கள்; விளைச்சல் அவர்களுக்கு இல்லை; கதிர் மாவைக் கொடுக்கமாட்டாது; கொடுத்தாலும் அந்நியர் அதை விழுங்குவார்கள்.

ஓசி 8:8 இஸ்ரவேலர் விழுங்கப் படுகிறார்கள்; அவர்கள் இனிப் புறஜாதிகளுக்குள்ளே விரும்பப்படாத பாத்திரத்தைப்போல் இருப்பார்கள்.

"காற்றை விதைத்து" - இதற்கு விக்கிரகங்களைச் செய்து அவற்றை வழிபடுவது என்று பொருள். (ஓசி 8:6-7) சூறைக்காற்று என்பதற்குத் தாங்கள் விதைத்த பாவத்தை அதிகமாக அறுப்பது என்று பொருள். எப்பிராயீம் தேசத்தாருடைய விக்கிரகாராதனையினால் அந்தத் தேசமே அழிந்துபோயிற்று. (ஓசி 8:6,9-14; 2இராஜா 17).

"அந்நியர் அதை விழுங்குவார்கள்" - மற்ற தேசங்களைப்போல இருக்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் நினைத்தார்கள். ஆனால் இவர்களிடத்திலோ விளைச்சல் இல்லை. விளைச்சல் வந்தாலும் அதை அந்நியர் விழுங்கிப் போடுகிறார்கள். இவர்களால் மற்ற தேசங்களைப் போல இருக்கமுடியவில்லை.

"இஸ்ரவேலர் விழுங்கப்படுகிறார்கள்" - இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களின் நிமித்தமாக அழிக்கப்படுகிறார்கள். புறஜாதியார் மத்தியில் சிதறடிக்கப்படுகிறார்கள்.

### 9. வேசித்தனமும் விக்கிரகாராதனையும்

ஓசி 8:9 அவர்கள் தனித்துத் திரிகிற காட்டுக் கழுதையைப்போல் அசீரியரண்டைக்குப் போனார்கள்; எப்பிராயீமர் நேசரைக் கூலிக்குப் பொருத்திக்கொண்டார்கள்.

ஓசி 8:10 அவர்கள் புறஜாதியாரைக் கூலிக்குப் பொருத்திக்கொண்டாலும், இப்பொழுது நான் அவர்களைக் கூட்டுவேன்; அதிபதிகளின் ராஜா சுமத்தும் சுமையினால் அவர்கள் கொஞ்ச காலத்துக்குள்ளே அகப்படுவார்கள்.

ஓசி 8:11 எப்பிராயீமர் பாவஞ் செய்வதற்கேதுவாய் பலிபீடங்களைப் பெருகப்பண்ணினார்கள்; ஆதலால் பலிபீடங்களே அவர்கள் பாவஞ்செய்வதற்கு ஏதுவாகும்.

ஓசி 8:12 என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்.

ஓசி 8:13 எனக்குச் செலுத்தும் பலிகளின் மாம்சத்தை அவர்கள் பலியிட்டுப் புசிக்கிறார்கள்; கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிரார்; அவர்களுடைய அக்கிரமத்தை அவர் நினைத்து, அவர்கள் பாவத்தை விசாரிக்கும்போதோவெனில், அவர்கள் எகிப்துக்குத் திரும்பிப் போவார்கள்.

## ஓசியா – தொகுப்புரை

### 8 அதிகாரம்

ஓசி 8:14 இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்; யூதா அரணான பட்டணங்களைப் பெருகப்பண்ணுகிறான்; ஆனாலும் நான் அதின் நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன்; அது அவைகளின் கோவில்களைப் பட்சிக்கும்.

"எப்பிராயீமர் நேசரைக் கூலிக்குப் பொருத்திக்கொண்டார்கள்." - இஸ்ரவேல் தேசத்தார் மற்ற தேசங்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு அவர்களோடு சேர்ந்து பாவம் செய்கிறார்கள். இதற்காக இஸ்ரவேல் தேசம் அழிக்கப்படுகிறது. இதன் பின்பு கடைசி நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டு தங்கள் சொந்த தேசத்தில் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படுவார்கள். (ஓசி 8:9-14).

"என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்" - வேதாகமத்திலுள்ள வார்த்தைகளெல்லாம் தேவனுடைய ஆவியினாலே ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. இவற்றை எழுதுவதற்குக் கர்த்தர் மனுஷரைக் கருவிகளாகப் பயன்படுத்தினார். (2தீமோ 3:15-17). எல்லாக் காலங்களிலும் கர்த்தரே தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசியிருக்கிறார். (எபி 1:1) இக்காலத்தில் கர்த்தர் தம்முடைய குமாரன் மூலமாகவும், (யோவான் 7:16; யோவான் 8:28,46-47; யோவான் 12:49; யோவான் 14:10,24; யோவான் 17:8) பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் (யோவான் 16:13; எபி 2:4) கர்த்தர் நம்மோடு பேசுகிறார்.

"எனக்குச் செலுத்தும் பலிகளின் மாம்சத்தை அவர்கள் பலியிட்டுப் புசிக்கிறார்கள்" - கர்த்தருக்குச் செலுத்தும் பலிகளின் மாம்சத்தைப் புசிப்பது மோசேயின் பிரமாணத்திற்கு முரணானது.

"அவர்கள் எகிப்துக்குத் திரும்பிப் போவார்கள்." - அவர்கள் எகிப்தோடு உடன்படிக்கை பண்ணிக் கொள்வார்கள். எகிப்தியரை நம்புவார்கள். எகிப்தியருக்குக் கீழ்ப்படிவார்கள். இஸ்ரவேல் ஒரு தேசமாக மறுபடியும் எகிப்துக்குத் திரும்பிப் போகாது. எருசலேம் விழுந்தபின்பு, யூதரில் ஒருசிலர் மாத்திரமே எருசலேமிற்குத் திரும்பிப் போனார்கள். இதற்காக அவர்கள் சபிக்கப் பட்டார்கள். (எரே 43-44).

"இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்" - இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களுக்கு ஏராளமான கோவில்களைக் கட்டுகிறார்கள். யூதாவின் புத்திரரோ அரணான பட்டணங்களை ஏராளமாகக் கட்டுகிறார்கள். இவையெல்லாமே இவர்களுடைய பாவங்களினிமித்தமாக அழிந்துபோயிற்று.

## ஓசியா - தொகுப்புரை

### 9 அதிகாரம்

ஓசி 9:1 இஸ்ரவேலே, மகிழ்ச்சியாயிராதே; மற்ற ஜனங்களைப்போல் களிகூராதே; உன் தேவனைவிட்டு நீ சோரம்போனாய்; தானியம் போரடிக்கிற சகல களங்களிலும் பணையத்தை நாடுகிறாய்.

**தீர்க்கதரிசன எண் - 11**

"இஸ்ரவேலே, மகிழ்ச்சியாயிராதே; மற்ற ஜனங்களைப்போல் களிகூராதே......" (ஓசி 9:1-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. தானியக்களமும் திராட்சத்தொட்டியும் அவர்களைப் பிழைப்பூட்டுவதில்லை; (ஓசி 9:2).
2. எப்பிராயீமர் திரும்ப எகிப்துக்குப் போவார்கள்; அசீரியாவில் தீட்டுள்ளதைப் புசிப்பார்கள். (ஓசி 9:3).
3. அவர்கள் கர்த்தருக்குத் திராட்சரசத்தின் பானபலியை வார்ப்பதில்லை. (ஓசி 9:4).
4. அவர்களுடைய பலிகள் அவருக்கு அங்கிகரிப்பாயிருப்பதில்லை.
5. அவர்களுடைய பலிகள் அவர்களுக்குத் துக்கங் கொண்டாடுகிறவர்களின் அப்பத்தை போல இருக்கும்.
6. அவர்கள் பாழ்க்கடிக்கப்படுவார்கள். (ஓசி 9:6).
7. எகிப்து அவர்களைச் சேர்த்துக்கொள்ளும், மோப் பட்டணம் அவர்களை அடக்கம் பண்ணும்.
8. அவர்களுடைய வாசஸ்தலங்களில் முட்செடிகள் முளைக்கும்.
9. விசாரிப்பின் நாட்கள் வரும், நீதி சரிக்கட்டும் நாட்கள் வரும் என்பதை இஸ்ரவேலர் அறிந்துகொள்வார்கள் (ஓசி 9:7).
10. கர்த்தர் தீர்க்கதரிசிகளுடைய பாவங்களை விசாரிப்பார். (ஓசி 9:8-9).
11. எப்பிராயீமின் மகிமை ஒரு பறவையைப்போல் பறந்துபோம் (ஓசி 9:11).
12. அது பிறப்பதுமில்லை, வயிற்றிலிருப்பதுமில்லை, கர்ப்பந்தரிப்பதுமில்லை.
13. அவர்களுடைய பிள்ளைகள் அழிக்கப் படுவார்கள். (ஓசி 9:12).
14. அவர்களுக்கு மனுஷர் இருக்க மாட்டார்கள்.
15. கர்த்தர் இஸ்ரவேலை விட்டுப்போய் விடுவார்.
16. எப்பிராயீமர் தங்கள் குமாரரைக் கொலைசெய்கிறவனிடத்தில் வெளியே கொண்டுபோய் விடுவார்கள். (ஓசி 9:13).
17. அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களை நான் என் சமுகத்தைவிட்டுத் துரத்துவேன் (ஓசி 9:15).
18. இனி அவர்களை நேசிக்கமாட்டேன்.
19. அவர்கள் பிள்ளைகளைப் பெற்றாலும், அவர்களுடைய கர்ப்பத்தின் பிரியமான கனிகளை அதம்பண்ணுவேன். (ஓசி 9:16).
20. தேவன் அவர்களை வெறுத்துவிடுவார் (ஓசி 9:17).
21. அவர்கள் அந்நியஜாதிகளுக்குள்ளே அலைந்து திரிவார்கள்.

**இஸ்ரவேலின் பாவங்கள்**

1. தன் தேவனைவிட்டு சோரம்போயிற்று.
2. பணையத்தை நாடுகிறது.

### 9 அதிகாரம்

**10. எகிப்திற்கும் அசீரியாவிற்கும் சிறைப்பட்டுப்போனார்கள்** - (2இராஜா 17; 2நாளா 36:1-4)

ஓசி 9:2 தானியக்களமும் திராட்சத் தொட்டியும் அவர்களைப் பிழைப்பூட்டுவதில்லை; அவர்களுக்குத் திராட்சரசம் ஒழிந்துபோகும்.

ஓசி 9:3 அவர்கள் கர்த்தருடைய தேசத்தில் குடியிருப்பதில்லை; எப்பிராயீமர் திரும்ப எகிப்துக்குப் போவார்கள்; அசீரியாவில் தீட்டுள்ளதைப் புசிப்பார்கள்.

ஓசி 9:4 அவர்கள் கர்த்தருக்குத் திராட்சரசத்தின் பானபலியை வார்ப்பதுமில்லை, அவருக்கு அங்கிகரிப்பாயிருப்பது மில்லை; அவர்களுடைய பலிகள் அவர்களுக்குத் துக்கங் கொண்டாடுகிறவர்களின் அப்பத்தை போல இருக்கும்; அதைப் புசிக்கிற யாவரும் தீட்டுப்படுவார்கள்; அவர்களுடைய அப்பம் அவர்களுக்கேயாகும், அது கர்த்தருடைய ஆலயத்தில் வருவதில்லை.

ஓசி 9:5 ஆசரிப்பு நாளிலும், கர்த்தருடைய பண்டிகை நாளிலும் என்ன செய்வீர்கள்?

ஓசி 9:6 இதோ, அவர்கள் பாழ்க்கடிப்புக்குத் தப்பிப்படி போய்விட்டார்கள்; எகிப்து அவர்களைச் சேர்த்துக்கொள்ளும், மோப் பட்டணம் அவர்களை அடக்கம்பண்ணும்; அவர்களுடைய வெள்ளியிருந்த விருப்பமான இடங்கள் காஞ்சொறிகளுக்குச் சுதந்தரமாகும்; அவர்களுடைய வாசஸ்தலங்களில் முட்செடிகள் முளைக்கும்.

ஓசி 9:7 விசாரிப்பின் நாட்கள் வரும், நீதி சரிக்கட்டும் நாட்கள் வரும் என்பதை இஸ்ரவேலர் அறிந்துகொள்வார்கள்; உன் மிகுதியான அக்கிரமத்தினாலேயும், மிகுதியான பகையினாலேயும் தீர்க்கதரிசிகள் மூடரும், ஆவியைப் பெற்ற மனுஷர்கள் பித்தங் கொண்டவர்களுமாயிருக்கிறார்கள்.

"எப்பிராயீமர் திரும்ப எகிப்துக்குப் போவார்கள்" - இஸ்ரவேல் புத்திரர் ஒரு தேசமாக எகிப்திற்குத் திரும்பிப் போகமாட்டார்கள். அசீரியர் இவர்களுக்கு எதிராக வரும்போது எகிப்து தங்களுக்கு உதவி புரியுமென்று நம்புவார்கள். (ஓசி 9:2; ஓசி 8:13; ஓசி 11:5; எசே 4:13).

"அசீரியாவில் தீட்டுள்ளதைப் புசிப்பார்கள்." - அசீரியாவின் சிறையிருப்புக்குப் போவார்கள். (2இராஜா 17; எசே 4:13).

"துக்கங் கொண்டாடுகிறவர்களின் அப்பம்" - இந்த அப்பம் தீட்டானது. (எண் 19:11-14; உபா 16:14).

"எகிப்து அவர்களைச் சேர்த்துக்கொள்ளும், மோப் பட்டணம் அவர்களை அடக்கம்பண்ணும்" - அசீரியரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எகிப்து தேசத்திற்கு அநேகர் ஓடிப்போவார்கள். ஆனால் அங்கு அவர்கள் மரித்துப்போவார்கள். (எசே 29:5).

"அவர்களுடைய வாசஸ்தலங்களில் முட்செடிகள் முளைக்கும்" - இஸ்ரவேலருடைய வாசஸ்தலங்கள் அழிந்துபோகும். பாழாய்ப்போகும். அவை காஞ்சொறிகளுக்குச் சுதந்தரமாகும். அங்கு முட்செடிகள் முளைக்கும்.

"விசாரிப்பின் நாட்கள் வரும், நீதி சரிக்கட்டும் நாட்கள் வரும்" - இந்த நாட்கள் வராது என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் கூறிவந்தார்கள். ஆகையினால் கர்த்தருக்குப் பயப்பட வேண்டியதில்லை என்றும், தங்களுக்கு இஷ்டமானபடி ஜீவிக்கலாம் என்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் பொய்யான உபதேசங்களைக் கூறிவந்தார்கள். ஆனால் விசாரிப்பின் நாட்கள் வரும், நீதி சரிக்கட்டும் நாட்கள் வரும் என்பதை இஸ்ரவேலர் அறிந்து கொள்வார்கள்.

## 9 அதிகாரம்

**கள்ளத்தீர்க்கதரிசிகளின் சுபாவம்**

1. மூடர் (ஓசி 9:7).
2. பித்தங்கொண்டவர்கள்.
3. குருவிபிடிக்கிறவனுடைய கண்ணி. (ஓசி 9:8).
4. தன் தேவனுடைய ஆலயத்திலே பகையாளி.
5. தங்களை மிகவும் கெடுத்துக் கொண்டவர்கள். (ஓசி 9:9).

**11. இஸ்ரவேலர் தங்களை முழுவதுமாக கெடுத்துக் கொண்டார்கள்** - (ஏசா 1:5)

ஓசி 9:8 எப்பிராயீமின் காவற்காரர் என் தேவனோடு எதிர்த்து நிற்கிறார்கள்; தீர்க்கதரிசி தன் வழிகளிலெல்லாம் குருவி பிடிக்கிறவனுடைய கண்ணியாகவும், தன் தேவனுடைய ஆலயத்திலே பகையாளியாகவும் இருக்கிறான்.

ஓசி 9:9 கிபியாவின் நாட்களில் நடந்தது போல, அவர்கள் தங்களை மிகவும் கெடுத்துக்கொண்டார்கள்; அவர்களுடைய அக்கிரமத்தை அவர் நினைப்பார். அவர்களுடைய பாவங்களை விசாரிப்பார்.

ஓசி 9:10 வனாந்தரத்தில் திராட்சக் குலைகளைக் கண்டுபிடிப்பதுபோல இஸ்ரவேலைக் கண்டுபிடித்தேன்; அத்திமரத்தில் முதல் தரம் பழுத்த கனிகளைப்போல உங்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தேன்; ஆனாலும் அவர்கள் பாகால்பேயோர் அண்டைக்குப் போய், இலச்சையானதற்குத் தங்களை ஒப்புவித்து, தாங்கள் நேசித்தவைகளைப் போலத் தாங்களும் அருவருப்புள்ள வர்களானார்கள்.

"கிபியாவின் நாட்களில் நடந்தது போல" - இவர்கள் ஆண்புணர்ச்சிக்காரர்களும், அவர்களைப் பாதுகாக்கிறவர்களுமாக இருக்கிறார்கள். நியா 19-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பென்யமீன் புத்திரரைப் போல இருக்கிறார்கள்.

**இஸ்ரவேலின் ஒப்புமை**

1. வனாந்தரத்தில் திராட்சக்குலைகளைக் கண்டுபிடிப்பதுபோல கர்த்தர் இஸ்ரவேலைக் கண்டுபிடித்தார்.
2. அத்திமரத்தில் முதல் தரம் பழுத்த கனிகளைப்போல கர்த்தர் அவர்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தார்.

"பாகால்பேயோர்" (Baalpeor) - இதுபுறஜாதியாரின் தெய்வம். இந்த விக்கிரகாராதனையில் வேசித்தனமும், விபச்சாரமும் கலந்திருக்கிறது. (எண் 25).

**12. முழுவதுமாக சீதறிப்போனார்கள்**

ஓசி 9:11 எப்பிராயீமின் மகிமை ஒரு பறவையைப்போல் பறந்துபோம்; அது பிறப்பதுமில்லை, வயிற்றிலி ருப்பதுமில்லை, கர்ப்பந்தரிப்பதுமில்லை.

ஓசி 9:12 அவர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்தாலும், அவர்களுக்கு மனுஷர் இராதபடிக்கு அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்குவேன்; நான் அவர்களை விட்டுப்போகையில் அவர்களுக்கு ஐயோ!.

ஓசி 9:13 நான் எப்பிராயீமைத் தீருவின் திசைமட்டும் இருக்கிறதைப் பார்க்கிற போது, அது நல்ல வசதியான ஸ்தலத்திலே நாட்டப்பட்டிருக்கிறது; ஆனாலும் எப்பிராயீமர் தங்கள் குமாரரைக் கொலைசெய்கிறவனிடத்தில் வெளியே கொண்டுபோய் விடுவார்கள்.

ஓசி 9:14 கர்த்தாவே, நீர் அவர்களுக்குக் கொடுப்பதைக் கொடும்; அவர்களுக்கு விழுந்துபோகிற கர்ப்பத்தையும் பாலற்ற முலைகளையும் கொடும்.

# ஓசியா – தொகுப்புரை

## 9 அதிகாரம்

ஓசி 9:15 அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் கில்காலிலே நடக்கும்; அங்கே நான் அவர்களை வெறுத்தேன்; அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களை நான் என் சமுகத்தைவிட்டுத் துரத்துவேன்; இனி அவர்களை நேசிக்கமாட்டேன்; அவர்களுடைய அதிபதிகள் எல்லாரும் துரோகிகள்.

ஓசி 9:16 எப்பிராயீமர் வெட்டுண்டு போனார்கள்; அவர்கள் வேர் உலர்ந்துபோயிற்று, கனிகொடுக்க மாட்டார்கள்; அவர்கள் பிள்ளைகளைப் பெற்றாலும், அவர்களுடைய கர்ப்பத்தின் பிரியமான கனிகளை அதம்பண்ணுவேன்.

ஓசி 9:17 அவர்கள் அவருக்குச் செவிகொடாமற்போனபடியால் என் தேவன் அவர்களை வெறுத்துவிடுவார்; அவர்கள் அந்நியஜாதிகளுக்குள்ளே அலைந்து திரிவார்கள்.

"எப்பிராயீமின் மகிமை ஒரு பறவையைப் போல் பறந்துபோம்" - எப்பிராயீம் முழுவதுமாக அழிந்துபோகும். இவர்கள் அந்நிய தேசத்தார் மத்தியில் சிறையிருப்புக்குப் போவார்கள். (ஓசி 9:11-17).

"அது நல்ல வசதியான ஸ்தலத்திலே நாட்டப் பட்டிருக்கிறது" - எப்பிராயீமின் சுதந்தரம் தீருவின் தேசத்தைப்போல இருக்கிறது. நல்ல வசதியாக உள்ளது.

"கர்த்தாவே, நீர் அவர்களுக்குக் கொடுப்பதைக் கொடும்" - இந்த வாக்கியம் மூலபாஷையில் "கர்த்தாவே, நீர் அவர்களுக்கு என்ன கொடுப்பீர்" என்று ஒரு கேள்வியாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அந்தக் கேள்விக்கு இந்த வசனத்தில் பதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் கில்காலிலே நடக்கும்" - கில்காலில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைப் புறக்கணித்து விட்டு தங்களுக்கு சவுலை ராஜாவாகத் தெரிந்தெடுத்தார்கள். (1சாமு 13:4-15; 1சாமு 15:12-33) இங்கு அவர்களுடைய துன்மார்க்கத்தின் நிமித்தம் கர்த்தர் அவர்களை வெறுப்பார். (ஓசி 4:15; ஓசி 12:11).

"இனி அவர்களை நேசிக்கமாட்டேன்" - இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்வதை விட்டு விட்டு, கர்த்தரிடத்தில் மனந்திருந்தி வந்தால் மட்டுமே கர்த்தர் அவர்களை நேசிப்பார். இல்லை யென்றால் கர்த்தர் அவர்களைப் புறக்கணித்து விடுவார். (ஓசி 5:15).

"என் தேவன் அவர்களை வெறுத்து விடுவார்" - எப்பிராயீம் புத்திரர் ஒரு காலத்தில் கர்த்தருடைய கிருபையில் இருந்தார்கள். ஆயினும் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்ததினால் கர்த்தர் அவர்களை வெறுத்துப்போடுகிறார். (யாத் 33:17; எரே 31:2; கலா 3:8; எபி 4:2; யூதா 1:4-5, ஓசி 9:8:3; ஓசி 9:17; 2இராஜா 23:27; 2இராஜா 24:20; 1நாளா 28:9; 2நாளா 7:20; எரே 7:15; எரே 15:1; எரே 23:39; எரே 31:37; மத் 5:13) பாவத்தின் சம்பவம் மரணம். பாவம் செய்கிறவர் யாராக இருந்தாலும், மனுஷனாக இருந்தாலும், தேவதூதராக இருந்தாலும், அவர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திருந்தி, கர்த்தரிடத்திற்கு வந்து அவருடைய பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையெனில், பாவம் செய்தவர்களுக்கு அழிவு நிச்சயம். (மத் 25:41; 2பேதுரு 2:4; யூதா 1:6-7). தம்மிடத்தில் மனந்திருந்தி வந்து பாவஅறிக்கை செய்கிறவர்களைக் கர்த்தர் மன்னிப்பார். (1யோவான் 1:9).

**10 அதிகாரம்**

**13. இஸ்ரவேலின் விக்கிரகாராதனை**

ஓசி 10:1 இஸ்ரவேல் பலனற்ற திராட்சச் செடி, அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது; அவன் தன் கனியின் திரளுக்குச் சரியாய்ப் பலி பீடங்களைத் திரளாக்குகிறான்; தங்கள் தேசத்தின் செழிப்புக்குச் சரியாய்ச் சிறப்பான சிலைகளைச் செய்கிறார்கள்.

**தீர்க்கதரிசன எண் - 12**

"இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது........" (ஓசி 10:1-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. அவர்கள் பலிபீடங்களை இடிப்பார். (ஓசி 10:2).
2. அவர்கள் சிலைகளை நாசமாக்குவார்.
3. நான் கர்த்தருக்குப் பயப்படாமற் போனபடியினால் நமக்கு ராஜா இல்லை என்று இனி சொல்லுவார்கள். (ஓசி 10:3).
4. வயல்வெளியின் படைச்சால்களில் விஷபூண்டுகளைப்போல நியாயத்தீர்ப்பு முளைக்கும். (ஓசி 10:4).
5. சமாரியாவின் குடிகள் பெத்தாவேனிலுள்ள கன்றுக்குட்டியினிமித்தம் பயம் அடைவார்கள் (ஓசி 10:5).
6. அது அவர்களை விட்டு நீக்கப்படும்.
7. அது அசீரியாவிலே யாரேப் ராஜாவுக்குக் காணிக்கையாகக் கொண்டு போகப்படும் (ஓசி 10:6).
8. எப்பிராயீம் இலச்சையடைவான்.
9. இஸ்ரவேல் தன் ஆலோசனையினாலே வெட்கப்படுவான்.
10. சமாரியாவின் ராஜா தண்ணீரின்மேல் இருக்கிற நுரையைப்போல் அழிந்து போவான். (ஓசி 10:7).
11. இஸ்ரவேலுடைய பாவமாகிய ஆபேனின் மேடைகள் அழிக்கப்படும் (ஓசி 10:8).
12. முட்செடிகளும் முட்பூண்டுகளும் அவர்கள் பலிபீடங்களின்மேல் முளைக்கும்.
13. பர்வதங்களைப்பார்த்து எங்களை மூடுங்கள் என்றும், குன்றுகளைப்பார்த்து எங்கள்மேல் விழுங்கள் என்றும் சொல்லுவார்கள்.
14. எப்பிராயீமை ஏர் பூட்டிஓட்டுவேன் (ஓசி 10:11).
15. யூதா உழுவான்.
16. யாக்கோபு அவனுக்குப் பரம்படிப்பான்.
17. ஜனங்களுக்குள் அமளி எழும்பும் (ஓசி 10:14)
18. அவர்களுடைய எல்லா அரண்களும் அழிக்கப்படும். (ஓசி 10:14).
19. உங்கள் கொடிய பொல்லாப்பினால் பெத்தேல் இப்படிப்பட்டதை உங்களுக்குச் செய்யும் (ஓசி 10:15).
20. அதிகாலமே இஸ்ரவேலின் ராஜா முற்றிலும் சங்கரிக்கப்படுவான். (2 இராஜா 17).

"பலனற்ற திராட்சச்செடி" - எப்பிராயீம் தனக்குத்தானே கனிகொடுக்கிறது. அதன் கனி பாவமாக இருக்கிறது.

**எப்பிராயீமின் அழிவிற்குக் காரணம்**

1. தனக்குத்தானே கனிகொடுக்கிறது (ஓசி 10:1)
2. பலிபீடங்களைத் திரளாக்குகிறார்கள்.
3. சிலைகளைச் செய்கிறார்கள்.
4. அவர்கள் இருதயம் பிரிக்கப்பட்டிருக்கிறது (ஓசி 10:2)
5. கர்த்தருக்குப் பயப்படவில்லை. (ஓசி 10:3)

## 10 அதிகாரம்

6. பொய்யாணையிடுகிற வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். (ஓசி 10:4)

7. ஆண் புணர்ச்சிக்காரராக இருக்கிறார்கள். (ஓசி 10:9)

8. விக்கிரகாராதனை செய்கிறார்கள். (ஓசி 10:10)

9. கொடிய பொல்லாப்பு செய்கிறார்கள். (ஓசி 10:13,15)

10. தங்கள் வழியையும் தங்கள் பராக்கிரசாலிகளின் திரளையும் நம்புகிறார்கள். (ஓசி 10:13)

**14. முழுவதுமாக அகற்றப்பட்டார்கள்** - (2 இராஜா 17)

ஓசி 10:2 அவர்கள் இருதயம் பிரிக்கப்பட்டிருக்கிறது; இப்போதும் குற்றஞ்சுமத்தப் படுவார்கள்; அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளை நாசமாக்குவார்.

ஓசி 10:3 நான் கர்த்தருக்குப் பயப்படாமற் போனபடியினால் நமக்கு ராஜா இல்லை; ராஜா இருந்தாலும் நமக்காக என்ன செய்வான் என்று இனிச் சொல்லுவார்கள்.

ஓசி 10:4 பொய்யாணையிடுகிற வார்த்தைகளைச் சொல்லி, உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்; ஆகையால் வயல்வெளியின் படைச்சால்களில் விஷபூண்டுகளைப்போல நியாயத்தீர்ப்பு முளைக்கும்.

ஓசி 10:5 சமாரியாவின் குடிகள் பெத்தாவேனிலுள்ள கன்றுக்குட்டியினிமித்தம் பயம்அடைவார்கள்; அதற்காகக் களிகூர்ந்த அதின் ஜனமும், அதின் பூசாசாரிகளும் அதின் மகிமை அதைவிட்டு நீங்கிப்போயிற்றென்று அதற்காகத் துக்கங் கொண்டாடுவார்கள்.

ஓசி 10:6 அதுவும் அசீரியாவிலே யாரேப் ராஜாவுக்குக் காணிக்கையாகக் கொண்டு போகப்படும்; எப்பிராயீம் இலச்சையடைவான்; இஸ்ரவேல் தன் ஆலோசனையினாலே வெட்கப்படுவான்.

ஓசி 10:7 சமாரியாவின் ராஜா தண்ணீரின்மேல் இருக்கிற நுரையைப்போல் அழிந்து போவான்.

ஓசி 10:8 இஸ்ரவேலுடைய பாவமாகிய ஆபேனின் மேடைகள் அழிக்கப்படும்; முட்செடிகளும் முட்பூண்டுகளும் அவர்கள் பலிபீடங்களின்மேல் முளைக்கும்; பர்வதங்களைப்பார்த்து எங்களை மூடுங்கள் என்றும், குன்றுகளைப்பார்த்து எங்கள்மேல் விழுங்கள் என்றும் சொல்லுவார்கள்.

**எப்பிராயீமின்மீது நியாயத்தீர்ப்பு**

1. பலிபீடங்கள் இடிக்கப்படும். (ஓசி 10:2)

2. சிலைகள் நாசமாக்கப்படும். (ஓசி 10:2,5)

3. ராஜ்யம் அழிக்கப்படும் (ஓசி 10:3,7,15)

4. இலச்சையும், வெட்கமும் உண்டாகும். (ஓசி 10:6)

5. பாவமாகிய மேடைகள் அழிக்கப்படும். (ஓசி 10:8)

6. முட்செடிகளும் முட்பூண்டுகளும் அவர்கள் பலிபீடங்களின்மேல் முளைக்கும்.

7. மரணத்திற்காகப் புலம்பும் வரையிலும் அவர்களுக்குத் துன்பம் உண்டாகும்.

8. யுத்தமும், தோல்வியும் உண்டாகும். (ஓசி 10:10,14-15)

9. தீவினையை அறுப்பார்கள். (ஓசி 10:13)

10. அரண்கள் அழிக்கப்படும். (ஓசி 10:14-15)

## 10 அதிகாரம்

"அவர்கள் இருதயம் பிரிக்கப்பட்டிருக்கிறது" - (1இராஜா 18:21; 2இராஜா 17:32-33,41).

"எங்களை மூடுங்கள்" - மிகுதியான பயத்தினால் ஓலமிடுகிறார்கள். (வெளி 6:16).

### 15. கிபியாவின் நாட்களிலிருந்து இஸ்ரவேலின் பாவ சுபாவத்தைப் பற்றி குற்றச்சாட்டு - (நியா 19-20)

ஓசி 10:9 இஸ்ரவேலே, நீ கிபியாவின் நாட்கள் முதல் பாவஞ்செய்துவந்தாய்; கிபியாவிலே அக்கிரமக்காரர்மேல் வந்த யுத்தம் தங்களைக் கிட்டுவதில்லையென்று அந்த நிலையிலே நிற்கிறார்கள்.

ஓசி 10:10 நான் அவர்களை தண்டிக்க விரும்புகிறேன். அவர்கள் செய்த இரண்டுவித பாவங்களினிமித்தம் கட்டப்படும்போது, ஜனங்கள் அவர்களுக்கு விரோதமாய்க் கூடுவார்கள்.

ஓசி 10:11 எப்பிராயீம் நன்றாய்ப் பழக்கப்பட்டுப் போரடிக்க விரும்புகிற கடாரியாயிருக்கிறான்; ஆனாலும் நான் அவன் அழகான கழுத்தின்மேல் நுகத்தடியை வைப்பேன்; எப்பிராயீமை ஏர் பூட்டிஓட்டுவேன்; யூதா உழுவான், யாக்கோபு அவனுக்குப் பரம்படிப்பான்.

"கிபியாவின் நாட்கள்" - (நியா 19-20)

"அவர்கள் செய்த இரண்டுவித பாவங்களினிமித்தம் கட்டப்படும்போது" - செப்துவஜிந்த் பதிப்பில் "அவர்கள் செய்த இரண்டுவித பாவங்களினிமித்தம் தண்டிக்கப்படும்போது" என்று எழுதப்பட்டிருக்கிறது. இரண்டுவிதப்பாவங்கள் என்பது இரண்டு பொன்கன்றுக்குட்டிகளைக் குறிக்கும். இவை இஸ்ரவேல் தேசத்தாரைத் தேவனிடமிருந்து விலகிப்போகப் பண்ணிற்று. (1இராஜா 12:26-33).

"எப்பிராயீமை ஏர் பூட்டிஓட்டுவேன்" - கர்த்தர் எப்பிராயீமைத் தமக்குக் கீழ்ப்படுத்துவார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் யூதாவும், யாக்கோபும் கிரியை செய்வார்கள். கர்த்தருக்கு விரோதமான கிரியைகளை அகற்றிப் போடுவார்கள்.

### 16. நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு

ஓசி 10:12 நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள், தயவுக் கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது.

**கர்த்தரைத் தேடும்போது செய்ய வேண்டிய காரியங்கள்**

1. நீதிக்கென்று விதைவிதையுங்கள் - பாவம் செய்வதை நிறுத்த வேண்டும். நீதியானதைச் செய்ய வேண்டும். நாம் விதைத்தை அறுப்போம். (2கொரி 9:6; கலா 6:7-9).

2. தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள் - கர்த்தர் நமக்குக் காண்பிக்கும் அவருடைய கிருபையை ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய கிருபை இல்லாமல் நமது சொந்த முயற்சியினால் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. நாம் நீதியைச் செய்ய வேண்டும். கிருபையைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் நீதி செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. (மத் 5:7; மாற்கு 11:25-26)

3. உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள் - இது மனுஷர் செய்ய வேண்டிய கிரியை. நம்முடைய ஜீவியத்தை நாம் பண்படுத்த வேண்டும். தரிசு நிலத்தைப் பண்படுத்த வேண்டும். அதில் விதைக்கக்கூடாது. அதைப் பண்படுத்திய பிறகே அதில் விதைக்க வேண்டும். நம்முடைய இருதயத்தைப்

## 10 அதிகாரம்

பண்படுத்தி, கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு, கர்த்தருக்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். நம்முடைய சித்தங்களும், நம்முடைய இருதயமும் உடைக்கப்பட்டு கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கப் படவேண்டும். (மத் 13: 3-12,18-23; யாக் 1:18,21; 1பேதுரு 1:23)

"கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும்" - நாம் கர்த்தரை எதுவரையிலும் தேட வேண்டுமென்றால் அவர் வந்து நம்மீது நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும் தேடவேண்டும்.

**கர்த்தரைத் தேடும் வழிகள்**

1. முழு இருதயத்தோடு (உபா 4:29)
2. தொடர்ந்து (1நாளா 16:11)
3. நம்மைத் தாழ்த்தி (2நாளா 7:14)
4. ஜெபத்தோடு
5. பாவத்திலிருந்து விலகி.
6. இருதயத்தை ஆயத்தப்படுத்தி (2நாளா 19:3)
7. விசுவாசத்தோடு (எபி 11:6)

**கர்த்தரைத் தேடுவதினால் வரும் ஆசீர்வாதம்**

1. கர்த்தரைக் கண்டுகொள்ளலாம் (1நாளா 28:9).
2. கர்த்தர் நமது ஜெபத்தைக் கேட்டு அதற்குப் பதில்கொடுப்பார். (2நாளா 7:14).
3. நமக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. (சங் 34:9-10).
4. ஜீவன் (சங் 69:22; ஆமோ 5:4-6)
5. நீதி (ஓசி 10:12)
6. மகிமை (ரோமர் 2:7)
7. கனம்
8. அழிவில்லாமை
9. நித்திய ஜீவன்
10. வெகுமதிகள் (எபி 11:6)

### 17. மறுப்பு - நியாயத்தீர்ப்பு தவிர்க்க முடியாதது

ஓசி 10:13 அநியாயத்தை உழுதீர்கள், தீவினையை அறுத்தீர்கள்; பொய்யின் கனிகளைப் புசித்தீர்கள்; உங்கள் வழியையும் உங்கள் பராக்கிரசாலி களின் திரளையும் நம்பினீர்கள்.

ஓசி 10:14 ஆகையால் உங்கள் ஜனங்களுக்குள் அமளி எழும்பும்; பிள்ளைகளின்மேல் தாய் மோதியடிக்கப் பட்ட யுத்தநாளிலே பெத்தார்பேலை சல்மான் அழித்ததுபோல, உங்கள் எல்லா அரண்களும் அழிக்கப்படும்.

ஓசி 10:15 உங்கள் கொடிய பொல்லாப்பினால் பெத்தேல் இப்படிப் பட்டதை உங்களுக்குச் செய்யும்; அதிகாலமே இஸ்ரவேலின் ராஜா முற்றிலும் சங்கரிக்கப்படுவான்.

**சாபத்தை வருவிக்கும் காரியங்கள்**

1. அநியாயத்தை விதைப்பது.
2. பொய்யின் கனியைப் புசிப்பது.
3. தங்கள் சொந்த வழிகளை நம்புவது.
4. மனுஷரை நம்புவது.

"சல்மான்" (Shalman) - இந்த ராஜாவைப் பற்றி அதிகமாகத் தெரியவில்லை. இவன் மோவாபின் ராஜாவாக இருக்கலாம். மூன்றாம் திகிலாத்பிலேசருக்கு இவன் கப்பங்கட்டினான். ஓசியாவின் காலத்தில் இருந்தவன். இவன் அசீரியாவின் ராஜாவாகிய சல்மனாசாராக இருக்க வேண்டுமென்று ஒருசிலர் கூறுகிறார்கள். இவன் ஓசெயாவிற்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்தான். (2இராஜா 17:3).

"பெத்தார்பேல்" (Betharbel) - இது யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள அர்பேலாக (Arbela) இருக்கலாம்.

## 11 அதிகாரம்

**18. தொடர்ச்சியான கலகம்** - (ஏசா 1:2)

ஓசி 11:1 இஸ்ரவேல் இளைஞனாயிருந்த போது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்.

ஓசி 11:2 அவர்கள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலக்கிப் போட்டார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங் காட்டினார்கள.

ஓசி 11:3 நான் எப்பிராயீமைக் கைபிடித்து நடக்கப் பழகினேன், ஆனாலும் நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற் போனார்கள்.

ஓசி 11:4 மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின்மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தேன்.

ஓசி11:5 மனந்திரும்பமாட்டோ மென்றதினால் அவர்கள் எகிப்து தேசத்துக்குத் திரும்பிப்போவதில்லை; அசீரியன் அவர்களுக்கு ராஜா.

ஓசி 11:6 ஆகையால் அவர்களுடைய ஆலோசனைகளினிமித்தம் பட்டயம் அவர்கள் பட்டணங்களுக்குள் பாய்ந்து, அவர்கள் தாழ்ப்பாள்களை நிர்மூலம் பண்ணி, அவர்களைப் பட்சிக்கும்.

ஓசி 11:7 என் ஜனங்கள் என்னைவிட்டு விலகுகிற மாறுபாட்டைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களை உன்னதமான வரிடத்தில் வரவழைத்தாலும் ஒருவனும் எழும்புகிறதில்லை.

**தீர்க்கதரிசன எண் - 13**

"இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்....." (ஓசி 11:1) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் குழந்தை பருவத்தையும், யோசேப்பிற்கு எச்சரிக்கப்பட்ட பின்பு அவர் இயேசு கிறிஸ்துவை எகிப்திலிருந்து அழைத்து வருவதையும் இந்தத் தீர்க்கதரிசனம் முன்னறிவிக்கிறது. (மத் 2:13-15).

"எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" - இந்த வாக்கியம் மத் 2:15 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது. (யாத் 4:23)

"பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டினார்கள்" - எப்பிராயீமின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருவதற்கு இதுவே காரணமாகும். அவர்கள் கர்த்தரை சேவியாமல் பாகால்களைச் சேவித்தார்கள். (ஓசி 11:3-4).

**தீர்க்கதரிசன எண் - 14**

"அவர்கள் எகிப்துதேசத்துக்குத் திரும்பிப்போவதில்லை......." (ஓசி 11:5-6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. அவர்கள் எகிப்துதேசத்துக்குத் திரும்பிப் போவதில்லை (ஓசி 11:5).
2. அசீரியன் அவர்களுக்கு ராஜாவாக இருப்பான்.
3. பட்டயம் அவர்கள் பட்டணங்களுக்குள் பாய்ந்து, அவர்கள் தாழ்ப்பாள்களை நிர்மூலம்பண்ணி, அவர்களைப் பட்சிக்கும். (ஓசி 11:6)

"அசீரியன் அவர்களுக்கு ராஜா" - அசீரியர் எப்பிராயீம் தேசத்தைத் தோற்கடித்து அவர்களைத் தங்களுடைய சிறையிருப்புக்கு உட்படுத்தினார்கள். (2 இராஜா 17).

## 11 அதிகாரம்

"மாறுபாட்டைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குப் பல எச்சரிப்புகளை அறிவித்தும், அவர்கள் கர்த்தரைப் பின்பற்றாமல் மாறுபாட்டைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். (ஓசி 4:16).

### 19. தேவனுடைய பொறுமை

ஓசி 11:8 எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப் போலாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப் போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது.

ஓசி 11:9 என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன்; எப்பிராயீமை அழிக்கும் படித் திரும்பமாட்டேன்; ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன்; நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர்; ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாக வரேன்.

ஓசி 11:10 அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவார்கள்; அவர் சிங்கத்தைப் போல் கெர்ச்சிப்பார்; அவர் கெர்ச்சிக்கும் போது அவர்கள் சந்ததியார் மேற்குத் திசையிலிருந்து நடுங்கி வருவார்கள்.

ஓசி 11:11 எகிப்திலிருந்து குருவிகளைப் போலவும், அசீரியா தேசத்திலிருந்து புறாக்களைப்போலவும் பயந்து வருவார்கள்; அப்பொழுது அவர்களை அவர்கள் வீடுகளில் குடியிருக்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அத்மாவைப்போல.....செபோயீமைப் போல" - இவ்விரு பட்டணங்களும் சோதோம் கொமோராவோடு அழிக்கப்பட்டன. (ஆதி 14:2,8). கர்த்தர் எப்பிராயீம் மீது கிருபையோடு இருக்கிறார். அவர்களை இந்தப் பட்டணங்களைப்போல அழிப்பதற்குக் கர்த்தருக்கு மனமில்லை.

"என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" - கர்த்தர் எப்பிராயீமிற்காக மனதிரங்குகிறார். அவர்களை அழிக்க வேண்டுமா அல்லது அழிக்க வேண்டாமா என்று கர்த்தருடைய இருதயம் அவருக்குள் புலம்புகிறது. எப்பிராயீம் அதிகமாகப் பாவம் செய்கிறது. ஆகையினால் அவர்களை அழிப்பதைத் தவிர வேறுவழியில்லை. தம்மைத் தேடுமாறும், அக்கிரமத்தைக் கைவிட்டு விட்டு, நீதியைச் செய்யுமாறும் கர்த்தர் அவர்களுக்கு ஆலோசனை கூறுகிறார். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் செய்து தொடர்ந்து துன்மார்க்கமாக ஜீவித்தால் அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பு வருமென்றும் கர்த்தர் அவர்களுக்கு எச்சரிக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய எச்சரிப்பிற்குச் செவிகொடுக்கவில்லை. தம்முடைய நீதிப்பிரமாணத்தின் பிரகாரம் கர்த்தர் எப்பிராயீம் தேசத்தைத் தண்டிக்கிறார்.

#### தீர்க்கதரிசன எண் - 15

"என் உக்கிர கோபத்தின்படியே செய்ய மாட்டேன்........" (ஓசி 11:9-11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

#### நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. என் உக்கிர கோபத்தின்படியே செய்ய மாட்டேன்(ஓசி 11:9).
2. எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன்.
3. நான் பட்டணத்துக்கு விரோதமாக வரேன்.
4. அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவார்கள் (ஓசி 11:10).
5. அவர் சிங்கத்தைப்போல் கெர்ச்சிப்பார்
6. அவர் கெர்ச்சிக்கும்போது அவர்கள் சந்ததியார் மேற்குத்திசையிலிருந்து நடுங்கி வருவார்கள்.
7. எகிப்திலிருந்து குருவிகளைப்போலவும், அசீரியா தேசத்திலிருந்து புறாக்களைப் போலவும் பயந்து வருவார்கள் (ஓசி 11:11).

**11 அதிகாரம்**

8. அவர்களை அவர்கள் வீடுகளில் குடியிருக்கப்பண்ணுவேன்.

இந்த முன்னறிவிப்புகள் வருங்காலத்தில் நிறைவேறும். ஏனெனில் கர்த்தர் எப்பிராயீமை அழித்துவிட்டார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் புத்திரர்மீது கர்த்தர் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தமாட்டார். எப்பிராயீமை அழிப்பதற்காகக் கர்த்தர் வரமாட்டார். அவர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இருப்பார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் எருசலேம் பட்டணத்தை அழிப்பதற்காக அந்தப் பட்டணத்திற்கு விரோதமாக வரமாட்டார். அதற்குப் பதிலாக எருசலேமை விடுவித்து, தம்முடைய ஜனங்களை அவர்களுடைய வீடுகளில் குடியிருக்கப்பண்ணுவார். (ஓசி 11:10-11).

## 20. இஸ்ரவேலின் பாவங்கள்

ஓசி 11:12 எப்பிராயீமர் பொய்களினாலும்,இஸ்ரவேல்வம்சத்தார் வஞ்சகத்தினாலும் என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; யூதாவோவெனில் இன்னும் தேவனோடே அரசாண்டு, பரிசுத்தவான்களோடே உண்மையாயிருக்கிறான்.

"யூதாவோவெனில் இன்னும் தேவனோடே அரசாண்டு" - எப்பிராயீம் தேசம் அழிக்கப்பட்ட பின்பும், யூதா தேசம் அழிக்கப்படாமல் சிறிது காலம் ஆளுகையில் இருக்கும். யூதாவிற்கு மனந்திரும்ப கர்த்தர் மேலும் கொஞ்சம் காலஅவகாசம் தருகிறார். எப்பிராயீமிற்கு வரும் தண்டனையிலிருந்து யூதாதேசம் நல்ல பாடத்தைப் படித்துக் கொள்ள வேண்டும். பல சமயங்களில் கர்த்தர் யூதாவைத் தம்முடைய ஊழியக்காரர்கள் மூலமாக எச்சரித்து வந்திருக்கிறார். யூதாவின் வழிகளைப் பின்பற்ற வேண்டாமென்றும், அவர்களுடைய வழிகளைப் பின்பற்றினால் அழிவு நிச்சயம் என்றும், யூதா எச்சரிக்கப்படுகிறது.ஆனால் யூதாவோ கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்க வில்லை. மேன்மேலும் பாவம் செய்கிறது. இதனால் கர்த்தர் யூதாவையும் நியாயம் விசாரிக்கிறார். எப்பிராயீம் அழிக்கப்பட்டு 133 வருஷங்களுக்குப் பின்பு யூதாவும் அழிக்கப்படுகிறது. (2இராஜா 17:24-25).

## 12 அதிகாரம்

ஓசி 12:1 எப்பிராயீம் காற்றை மேய்ந்து, கொண்டற்காற்றைப் பின்தொடருகிறான்; அவன் நாள்தோறும் பொய்யையும் கேட்டையும் வர்த்திக்கப்பண்ணி, அசீரியரோடே உடன்படிக்கை பண்ணுகிறான்; எகிப்துக்கு எண்ணெய் கொண்டுபோகப்படுகிறது.

"எப்பிராயீம் காற்றை மேய்ந்து" - எப்பிராயீம் மற்ற தேசங்களோடு உடன்படிக்கை பண்ணிற்று. ஆனால் அந்த உடன்படிக்கைகள் காற்றைப் போல காணாமற்போகும். எப்பிராயீமின் பாவம் ஒவ்வொரு நாளும் தொடருகிறது. அவர்கள் பொய்களினாலும், வஞ்சகத்தினாலும் நிறைந்திருக்கிறார்கள். (ஓசி 11:12).

"கொண்டல்காற்று" - இது கிழக்கு தேசங்களாகிய அசீரியரோடு ஒப்பந்தம் பண்ணுவதற்கு அடையாளமாகும்.

"எகிப்துக்கு எண்ணெய் கொண்டுபோகப் படுகிறது" - அசீரியாவிற்கு எதிராகத் தங்களுக்கு துணை புரிய எகிப்து தேசத்தின் ஆதரவைப் பெறுவதற்கு எப்பிராயீம் தேசத்தார் எகிப்தியருக்கு எண்ணெயைக் கொண்டு போகிறார்கள்.

### 21. யாக்கோபு மனந்திருந்திய போது அவன்மீது தேவனுடைய இரக்கம்

ஓசி 12:2 யூதாவோடும் கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அவர் யாக்கோபை அவன் வழிகளுக்குத்தக்கதாக விசாரிக்கப் போகிறார்; அவன் கிரியைகளுக்குத் தக்கதாக அவனுக்கு நீதியைச் சரிக்கட்டுவார்.

ஓசி 12:3 அவன் தாயின் கர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிகாலைப் பிடித்தான்; தன் பெலத்தினால் தேவனோடே போராடினான்.

ஓசி 12:4 அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்; பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார்.

ஓசி 12:5 கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன்; யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம்.

**தீர்க்கதரிசன எண் - 16**

"அவர் யாக்கோபை அவன் வழிகளுக்குத் தக்கதாக விசாரிக்கப்போகிறார்; அவன் கிரியைகளுக்குத்தக்கதாக அவனுக்கு நீதியைச் சரிக்கட்டுவார்." (ஓசி 12:2) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அவன் தாயின் கர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிகாலைப் பிடித்தான்" - (ஆதி 25:26)

"தன் பெலத்தினால் தேவனோடே போராடினான்" - (ஆதி 32:24-32)

"தூதனானவர்" - யாக்கோபோடு போராடின தேவதூதன் கர்த்தரே. (ஓசி 12:5) "ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி" (ஆதி 32:24) இது சாதாரணமாக ஆவிக்குரிய போராட்டமல்ல. ஒரு மனுஷனோடு உண்மையிலேயே போராடுவதைக் குறிக்கும். இந்த வாக்கியத்தில் மனுஷன் என்பதற்கான எபிரெய வார்த்தை "ஈஷ்"(iysh) என்பதாகும். யாத் 15:3; யோசு 5:13; தானி 10:5; தானி 12:6-7; சக 1:8 ஆகிய வசனங்களில் இது தேவனைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து" - தேவன் யாக்கோபைப் பெத்தேலில் சந்தித்தார். (ஆதி 28:17-19). ஓசியாவின் காலத்திலோ பெத்தேல் விக்கிரகாராதனை நடைபெறும் ஸ்தலமாக இருக்கிறது. (1இராஜா 12:28-33).

### 22. இஸ்ரவேலுக்கு இது பொருந்தும்

ஓசி 12:6 இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு; தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு, இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு.

## ஓசியா - தொகுப்புரை

### 12 அதிகாரம்

**தேவனோடு பரிபூரண ஐக்கியமடையும் வழிகள்**

1. தேவனிடத்தில் திரும்ப வேண்டும்.
2. தயவைக் கைக்கொள்ளவேண்டும் - கிருபையில் ஜீவிக்க வேண்டும்.
3. தேவனோடும், மனுஷரோடும் நியாயத்தைக் கைக்கொள்ள வேண்டும்
4. இடைவிடாமல் தேவனை நம்பிக் கொண்டிருக்க வேண்டும்.

### 23. இஸ்ரவேலின் குணாதிசயங்கள்

ஓசி 12:7 அவன் வியாபாரி, கள்ளத்தராசு அவன் கையில் இருக்கிறது; அநியாயஞ் செய்ய விரும்புகிறான்.

ஓசி 12:8 எப்பிராயீம்: நான் ஐசுவரியவானானேன்; நான் பொருளைச் சம்பாதித்தேன்; நான் பிரயாசப்பட்டுத் தேடின எல்லாற்றிலும் பாவமாகிய அக்கிரமம் என்னிடத்தில் கண்டுபிடிக்கப் படுவதில்லையென்று சொல்லுகிறான்.

**எப்பிராயீமின் சுபாவம்** (ஓசி 12:7-8)

1. அவன் ஒரு வியாபாரி.
2. கள்ளத்தராசு அவன் கையில் இருக்கிறது - வஞ்சிக்கிறவன்.
3. அநியாயஞ்செய்ய விரும்புகிறான்.
4. நான் ஐசுவரியவானானேன்; நான் பொருளைச் சம்பாதித்தேன் என்று பெருமைப்படுகிறான்.
5. நான் பிரயாசப்பட்டுத் தேடின எல்லாற்றிலும் பாவமாகிய அக்கிரமம் என்னிடத்தில் கண்டுபிடிக்கப் படுவதில்லையென்று மாய்மாலமாக இருக்கிறான்.

### 24. இஸ்ரவேல் இன்னும் மனந்திருந்த வேண்டும்

ஓசி 12:9 உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்தது முதற்கொண்டு உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான், பண்டிகை நாட்களில் செய்யப்படுகிறதுபோல், திரும்பவும் உன்னைக் கூடாரங்களில் தாபரிக்கப்பண்ணுவேன்.

ஓசி 12:10 அப்படியே தீர்க்கதரிசிகளோடே சொன்னேன்; நான் அநேகம் தரிசனங்களை அருளினேன்; தீர்க்கதரிசிகளைக் கொண்டு உவமைகளால் பேசினேன்.

**தீர்க்கதரிசன எண் - 17**

“திரும்பவும் உன்னைக் கூடாரங்களில் தாபரிக்கப்பண்ணுவேன்” (ஓசி 12:9) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. எப்பிராயீம் இன்னும் மனந்திருந்தவில்லை. கூடாரங்களில் தாபரிக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மனந்திருந்தி, பண்டிகை நாட்களில் செய்யப்படுவதுபோல் கூடாரங்களில் தாபரிப்பார்கள். (சக 12:10-13:1; ரோமர் 11:26; ஏசா 66:8).

**தேவன் பேசும் வழிகள்**

1. தீர்க்கதரிசிகள் மூலமாக. (எபி 1:1)
2. தரிசனங்கள் மூலமாக (ஆதி 46:2; எசே 1)
3. உவமைகள் மூலமாக.

### 25. இஸ்ரவேலின் விக்கிரகாராதனை

### 26. பிரயாணத்தில் யாக்கோபிற்கும் இஸ்ரவேலுக்கும் தேவனுடைய இரக்கங்கள்

ஓசி 12:11 கீலேயாத் அக்கிரம ஸ்தலமோ? ஆம், அவர்கள் அபத்தரானார்கள்; கில்காலிலே காளைகளைப் பலியிடுகிறார்கள்; அவர்களுடைய பீடங்கள் வயல்வரப்புகளில் இருக்கிற கற்குவியல்களைப்போல் இருக்கிறது.

## 12 அதிகாரம்

ஓசி 12:12 யாக்கோபு சீரியாதேசத்துக்கு ஓடிப்போய், இஸ்ரவேல் ஒரு பெண்ணுக்காக ஊழியஞ்செய்து, ஒரு பெண்ணுக்காக ஆடு மேய்த்தான்.

ஓசி 12:13 கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார்; தீர்க்கதரிசியினால் காக்கப்பட்டான்.

"அவர்கள் அபத்தரானார்கள்" - விக்கிரகங்கள் மாயை என்றும், அபத்தமானவை என்றும் கூறப்பட்டிருக்கிறது. விக்கிரகங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

"யாக்கோபு சீரியாதேசத்துக்கு ஓடிப்போய்" - (ஆதி 28-30)

"இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார்" - (யாத் 1-12; உபா 18:18)

### 27. இஸ்ரவேல் இப்பொழுது தேவனுக்கு நன்றி செலுத்தவில்லை

ஓசி 12:14 எப்பிராயீமோ அவரை மிகவும் கோபப்படுத்தினான்; ஆகையால் அவனுடைய ஆண்டவர் அவனுடைய இரத்தப்பழிகளை அவன்மேல் சுமத்தி, அவன் செய்த நிந்தையை அவன்மேல் திருப்புவார்.

**தீர்க்கதரிசன எண் - 18**

"எப்பிராயீமோ அவரை மிகவும் கோபப்படுத்தினான்....." (ஓசி 12:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. எப்பிராயீம் தான் விதைத்ததற்குத் தகுந்தபடி தண்டிக்கப்படுவான்.

## 13 அதிகாரம்

ஓசி 13:1 எப்பிராயீம் பேசினபோது நடுக்கமுண்டாயிற்று; அவன் இஸ்ரவேலிலே மேன்மைபெற்றான்; அவன் பாகால்விஷயத்தில் குற்றஞ்செய்து மடிந்துபோனான்.

ஓசி 13:2 இப்போதும் அவர்கள் அதிகமதிகமாய்ப் பாவஞ்செய்து, தங்கள் வெள்ளியினால் வார்ப்பித்த சுரூபங்களையும், தங்கள் புத்திக்கேற்ற விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டு பண்ணுகிறார்கள்; இவைகளெல்லாரும் தட்டாருடைய வேலை; மனுஷரில் பலியிடுகிறவர்கள் கன்றுக் குட்டிகளை முத்தமிடலாமென்று இவைகளைக் குறித்துச் சொல்லுகிறார்கள்.

“எப்பிராயீம் பேசினபோது நடுக்கமுண்டாயிற்று” - ஒரு காலத்தில் எப்பிராயீமின் வார்த்தைக்கு மதிப்பு இருந்தது. அவன் இஸ்ரவேலிலே மேன்மை பெற்றவனாக இருந்தான். அப்படிப்பட்டவன் தன்னைத்தானே உயர்த்தி, பாகால்களைச் சேவித்து, தன்னுடைய மேன்மையைக் கெடுத்துக் கொண்டான். (யோசு 24:14). இப்போது எப்பிராயீம் புத்திரர் அதிகமாகப் பாவம் செய்கிறார்கள். பொன்கன்றுக்குட்டிகளையும், மற்ற விக்கிரகங்களையும், சுரூபங்களையும் ஆராதிக்கிறார்கள். (ஓசி 12:2).

### 28. இஸ்ரவேல்மீது நியாயத்தீர்ப்பு

ஓசி 13:3 ஆகையால் அவர்கள் காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற் காலையில் ஒழிந்துபோகிற பனியைப் போலவும், பெருங்காற்று களத்திலி ருந்து பறக்கடிக்கிற பதரைப்போலவும், புகைக்கூண்டில் ஏறிப்போகிற புகையைப் போலவும் இருப்பார்கள்.

ஓசி 13:4 நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்ததுமுதல் உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிறேன்; ஆகையால் நீ என்னையன்றி வேறே தேவனை அறியவேண்டாம்; என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை.

ஓசி 13:5 நான் உன்னை மகா வறட்சியான தேசமாகிய வனாந்தரத்திலே அறிந்துகொண்டேன்.

ஓசி 13:6 தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள்; திருப்தியான பின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று; அதினால் என்னை மறந்தார்கள்.

ஓசி 13:7 ஆகையால் நான் அவர்களுக்குச் சிங்கத்தைப்போல் இருப்பேன்; சிவிங்கியைப் போல் வழியருகே பதிவிருப்பேன்.

ஓசி 13:8 குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப் போல நான் அவர்களை எதிர்த்து, அவர்கள் ஈரற்குலையைக் கிழித்து, அவர்களை அங்கே சிங்கம் பட்சிக்கிறதுபோல் பட்சித்துப் போடுவேன்; காட்டுமிருகங்கள் அவர்களைப் பீறிப்போடும்.

### தீர்க்கதரிசன எண் - 19

“ஆகையால் அவர்கள் காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் ஒழிந்துபோகிற பனியைப்போலவும்........” (ஓசி 13:3-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

### நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. அவர்கள் காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் ஒழிந்துபோகிற பனியைப்போலவும், பெருங்காற்று களத்திலிருந்து பறக்கடிக்கிற பதரைப்போலவும், புகைக் கூண்டில் ஏறிப்போகிற புகையைப்போலவும் இருப்பார்கள். (ஓசி 13:3).

2. எப்பிராயீம் கர்த்தரையன்றி வேறே தேவனை அறியமாட்டார்கள். (ஓசி 13:4).

“வனாந்தரத்திலே அறிந்துகொண்டேன்” - எப்பிராயீமை மாத்திரமல்லாமல் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் கர்த்தர் வனாந்தரத்தில் அறிந்துகொண்டார். அவர்களும் கர்த்தரை அறிந்து கொண்டார்கள்.

## 13 அதிகாரம்

"தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள்" - கர்த்தர் அவர்களை அதிகமாக ஆசீர்வதித்தார். அவர்கள் திருப்தி அடைந்தார்கள். ஆனால் திருப்தியடைந்த பின்பு, அவர்களுடைய இருதயம் மேட்டிமையாயிற்று. அவர்கள் கர்த்தரை மறந்தார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள். கர்த்தரிடத்திலிருந்து நன்மையைப் பெற்று, கர்த்தருக்கு விரோதமாகத் தங்களை உயர்த்தி கர்த்தரை மறந்துவிட்டார்கள்.

**தீர்க்கதரிசன எண் - 20**

"ஆகையால் நான் அவர்களுக்குச் சிங்கத்தைப்போல் இருப்பேன்........" (ஓசி 13:7-8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புகள்**

1. நான் அவர்களுக்குச் சிங்கத்தைப்போல் இபே்பேன் (ஓசி 13:7).
2. சிவிங்கியைப் போல் வழியருகே பதிவிருப்பேன்.
3. குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப் போல நான் அவர்களை எதிர்ப்பேன். (ஓசி 13:8).
4. அவர்கள் ஈரற்குலையைக் கிழிப்பேன்.
5. அவர்களை அங்கே சிங்கம் பட்சிக்கிறதுபோல் பட்சித்துப் போடுவேன்
6. காட்டுமிருகங்கள் அவர்களைப் பீறிப்போடும்.

## V. இஸ்ரவேலின் இறுதி மீட்பு - (13:9-14:9)

### 1. தற்பொழுதுள்ள நியாயத் தீர்ப்புக்களுக்குக் காரணம்

ஓசி 13:9 இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய்; ஆனாலும் என்னிடத்தில் உனக்கு சகாயம் உண்டு.

ஓசி 13:10 எனக்கு ராஜாவையும் அதிபதிகளையும் ஏற்படுத்தவேண்டும் என்றாயே; இப்போதும் உன்னுடைய எல்லாப் பட்டணங்களிலும் உன்னை இரட்சிக்கும் ராஜா எங்கே? உன் நியாயாதிபதிகள் எங்கே?

ஓசி 13:11 நான் கோபத்திலே உனக்கு ராஜாவைக் கொடுத்தேன்; என் உக்கிரத்திலே அவனை எடுத்துக் கொண்டேன்.

ஓசி 13:12 எப்பிராயீமின் அக்கிரமம் கட்டி வைத்திருக்கிறது; அவன் பாவம் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஓசி 13:13 பிரசவஸ்திரீயின் வேதனை அவனுக்கு வரும்; அவன் விவேகமில்லாத பிள்ளை; பேறுகாலமட்டும் அவன் நிற்கவில்லை.

"இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய்" - இஸ்ரவேலர் கர்த்தரைப் பின்பற்றவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிய வில்லை. இதனால் அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டார்கள். கர்த்தரே இதுவரையிலும் அவர்களுக்கு உதவி புரிந்தவர். ஆபத்துக் காலத்தில் அவர்களைப் பாதுகாத்தவர். ஆனால் அவர்கள் கர்த்தருடைய கிரியைகளை நினைத்துப் பார்க்காமல் கர்த்தரை மறந்துவிட்டார்கள்.

"எனக்கு ராஜாவையும் அதிபதிகளையும் ஏற்படுத்தவேண்டும்" - ஜனங்கள் கர்த்தரைத் தள்ளிவிட்டு, சவுலைத் தங்களுக்கு ராஜாவாக ஆக்க வேண்டுமென்று கூறினார்கள். (1சாமு 8-10). இஸ்ரவேலின் ராஜாக்களாலும், அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. சிறையிருப்பிலிருந்தும், அடிமைத் தனத்திலிருந்தும், பலவீனத்திலிருந்தும், அழிவிலிருந்தும், ராஜாக்களாலும், பிரபுக்களாலும் இஸ்ரவேலரைப் பாதுகாக்க முடியவில்லை. கர்த்தரே அவர்களைப் பாதுகாக்கக்கூடியவர். கர்த்தர் தாமே வந்து அவர்களுடைய ராஜாவாக இருப்பார். அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். அது வரையிலும் இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் கைகளில் இருப்பார்கள்.

## 13 அதிகாரம்

### தீர்க்கதரிசன எண் - 21

"உன்னை இரட்சிக்கும் ராஜா எங்கே? உன் நியாயாதிபதிகள் எங்கே?" (ஓசி 13:10) இந்த வாக்கியம் மூலபாஷையில் "நான் உனக்கு இராஜாவாக இருப்பேன்" "I will be thy king" என்று எழுதப்பட்டிருக்கிறது. (ஓசி 13:10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் ராஜாவாக இருப்பார். அவர்களுடைய எல்லாப் பட்டணங்களிலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிப்பார்.

"நான் கோபத்திலே உனக்கு ராஜாவைக் கொடுத்தேன்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சவுலை ராஜாவாகக் கொடுத்தார். தேவனுடைய கோபத்தினால் சவுல் ராஜாவானான். (1சாமு 8-10) தேவனுடைய கோபத்தினால் சவுல் ராஜாவாக இராதபடி தள்ளிப்போடப்பட்டான். (1சாமு 15:22-28; 1சாமு 16:13-14; 1சாமு 31:1-13; 1நாளா 10:13-14).

### 2. மீட்பின் வாக்குத்தத்தம்

ஓசி 13:14 அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்.

### தீர்க்கதரிசன எண் - 22

"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்......." (ஓசி 13:14-16) ஓசி 13:14 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஓசி 13:15-16 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று.

### நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன் (ஓசி 13:14).
2. அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்.
3. நான் அவர்களுடைய வாதைகளாக இருப்பேன்.
4. நான் பாதாளத்தின் சங்காரமாக இருப்பேன்.
5. மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்.

### நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தருடைய காற்றாகிய கீழ்க்காற்று வனாந்தரத்திலிருந்து எழும்பிவரும். அதனால் அவனுடைய ஊற்றுகள் வற்றிப்போகும்; (ஓசி 13:15)
2. அது இச்சிக்கப்படத்தக்க சகல பதார்த்தங்களுள்ள உத்தம பதார்த்தங்களையும் வாரிக்கொண்டு போகும்.
3. சமாரியா குற்றஞ் சுமத்தப் பட்டதாயிருக்கும். (ஓசி 13:16).
4. அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்.
5. அவர்களுடைய குழந்தைகள் மோதியடிக்கப்படும்.
6. அவர்களுடைய கர்ப்பவதிகள் கீறப்பட்டுப் போவார்கள்.

### 3. முதலாவது முழுமையான அழிவு

ஓசி 13:15 இவன் சகோதரருக்குள்ளே ஜனம் பெருத்தவனாயிருந்தாலும், கர்த்தருடைய காற்றாகிய கீழ்க்காற்று வனாந்தரத்திலிருந்து எழும்பிவரும்; அதனால் அவனுடைய ஊற்றுகள் வற்றிப்போகும்; அவனுடைய துரவு சுவறிப்போகும்; அது இச்சிக்கப் படத்தக்க சகல பதார்த்தங்களுள்ள உத்தம பதார்த்தங்களையும் வாரிக்கொண்டு போகும்.

ஓசி 13:16 சமாரியா தன் தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணின படியால், குற்றஞ் சுமத்தப் பட்டதாயிருக்கும்; அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; அவர்களுடைய குழந்தைகள் மோதியடிக்கப்படும்; அவர்களுடைய கர்ப்பவதிகள் கீறப்பட்டுப்போவார்கள்.

## ஓசியா - தொகுப்புரை

### 14 அதிகாரம்

**4. தேவனிடம் திரும்பி வருமாறு அழைப்பு**

ஒசி 14:1 இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய்.

"இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு" - ஒசியா மூலமாகக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கடைசி அழைப்பு இங்கு கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கர்த்தரிடத்திற்குத் திரும்பி வரவேண்டுமென்றும், தங்களுடைய பாவங்கள் நீங்கி, அவர்கள் சுத்திகரிக்கப்பட வேண்டுமென்றும், அவர்களுடைய பாவமே அவர்களுடைய வீழ்ச்சிக்கும், அழிவுக்கும் காரணமென்றும் ஒசியா எப்பிராயீம் புத்திரரை எச்சரிக்கிறார். அவர்கள் மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் வரும்போது "தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" என்று அவர்கள் கூறவேண்டுமென்றும் தேவன் அறிவிக்கிறார். (ஒசி 14:1-2).

**5. இஸ்ரவேலின் வருங்கால பாவஅறிக்கை**

ஒசி 14:2 வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்.

ஒசி 14:3 அசீரியா எங்களை இரட்சிப்பதில்லை; நாங்கள் குதிரைகளின் மேல் ஏறமாட்டோம்; எங்கள் கைகளின் கிரியையைப் பார்த்து: நீங்கள் எங்கள் தேவர்கள் என்று இனிச் சொல்லமாட்டோம்; திக்கற்றவன் உம்மிடத்தில் இரக்கம்பெறுகிறான் என்று சொல்லுங்கள்.

"தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்" - புதிய ஏற்பாட்டிலும், ஆயக்காரன் தூரத்தினின்று தன் கண்களை வானத்திற்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு, தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று பாவஅறிக்கை செய்கிறான். (லூக்கா 18:13). புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் கர்த்தரிடமிருந்து அவருடைய மன்னிப்பை விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளலாம் என்பது தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. (ரோமர் 10:9-10; 1யோவான் 1:9)

"அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" - இந்த வாக்கியம் "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" என்று எபி 13:15 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது.

**தீர்க்கதரிசன எண் - 23**

"அசீரியா எங்களை இரட்சிப்பதில்லை;........" (ஒசி 14:3-9) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

**நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்**

1. அசீரியா எங்களை இரட்சிப்பதில்லை (ஒசி 14:3).
2. நாங்கள் குதிரைகளின் மீது நம்பிக்கை வைக்கமாட்டோம்.
3. எங்கள் கைகளின் கிரியையைப் பார்த்து: நீங்கள் எங்கள் தேவர்கள் என்று இனிச் சொல்லமாட்டோம்.
4. நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன் (ஒசி 14:4).
5. அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்.
6. நான் இஸ்ரவேலுக்குப் பனியைப் போலிருப்பேன் (ஒசி 14:5).
7. அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்.

## ஓசியா - தொகுப்புரை

### 14 அதிகாரம்

8. லீபனோனைப் போல் வேரூன்றி நிற்பான்.

9. அவன் கிளைகள் ஓங்கிப் படரும் (ஓசி 14:6).

10. அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப் போல இருக்கும்.

11. அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப் போல இருக்கும்.

12. அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள் (ஓசி 14:7).

13. தானிய விளைச்சலைப் போலச் செழிப்பார்கள்.

14. திராட்சச்செடிகளைப் போலப் படருவார்கள்.

15. அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப்போல இருக்கும்.

16. இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று எப்பிராயீம் சொல்லுவான் (ஓசி 14:8)

### 6. பதினான்கு அம்ச மீட்பு

ஓசி 14:4 நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களை விட்டு நீங்கிற்று.

ஓசி 14:5 நான் இஸ்ரவேலுக்குப் பனியைப் போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்; லீபனோனைப் போல் வேரூன்றி நிற்பான்.

ஓசி 14:6 அவன் கிளைகள் ஓங்கிப் படரும், அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப் போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப் போலவும் இருக்கும்.

ஓசி 14:7 அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள்; தானிய விளைச்சலைப் போலச் செழித்து, திராட்சச்செடிகளைப் போலப் படருவார்கள்; அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப்போல இருக்கும்.

ஓசி 14:8 இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று எப்பிராயீம் சொல்லுவான்; நான் அவனுக்குச் செவிகொடுத்து, அவன் மேல் நோக்கமாயிருந்தேன்; நான் பச்சையான தேவதாரு விருட்சம்போலிருக்கிறேன்; என்னாலே உன் கனியுண்டாயிற்று என்று எப்பிராயீம் சொல்லுவான்.

ஓசி 14:9 இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்.

### தேவன் இஸ்ரவேலோடு இருக்கும் விதம்

1. கர்த்தர் அவனுக்குச் செவிகொடுத்து, அவன் மேல் நோக்கமாயிருக்கிறார்.
2. தேவன் இஸ்ரவேலருக்குப் பச்சையான தேவதாரு விருட்சம்போலிருக்கிறார்.
3. தேவன் இஸ்ரவேலுக்குக் கனியுண்டாக்குகிறவராயிருக்கிறார்.